
www.padippakam.com

கார் 2003



இதழ் எண் 12

நன்கொடை ரூ.10/-

தனிச்சுற்றுக்கு மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



# மனித சமூகம்

ஒற்றுமையாக, ஒழுக்கத்துடன், சமத்துவத்துடன் வாழ, சாந்தியாய் இருக்க ஏதாவது ஒரு விதமான கடவுள் உணர்ச்சி மனிதனுக்கு வேண்டாமா என்று கேட்கிறார்கள். வேண்டுமென்றே வைத்துக் கொள்வதானால் அப்படிப்பட்ட உணர்ச்சியானது மக்கள் சமூகத்தில் ஒழுக்கம், ஒற்றுமை, சமத்துவம், சாந்தி அளிக்கிறதா என்பதை முதலில் கவனிக்க வேண்டாமா? எவ்வளவு அக்கிரமம் செய்தபோதிலும் பிரார்த்தனை, கடவுள் பெயர் உச்சரிப்பு, புண்ணியஸ்தல யாத்திரை செய்த மாத்திரத்தில் மன்னிப்பும் பாப விமோசனமும் கிடைக்கும் - ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு-அதனால் மக்களுக்கு அக்கிரமம் செய்யவே தைரியம் தருகிறதேயல்லாமல் யோக்கியனாக, அன்பனாக நடக்கக் கட்டாயப்படுத்துகிறதா?

*-தந்தை பெரியார்*

***(ஆய்க்கவுண்டன் பட்டியில் 23-01-1938-ல் சொற்பொழிவு குடி அரசு 30-01-1938)***

*வாழ்த்துக்களுடன்...*

## பகுத்தறிவாளர் கழகம்
## அருப்புக்கோட்டை

**விடுதலை, உண்மை, பெரியார் பிஞ்சு RATIONALIST படியுங்கள்**

www.padippakam.com

கதவு - 12
கார் 2003
வெளியீடு : கருத்தாளர் வட்டம்
(A unit of APPA)
5-36-4ஆ, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு
அருப்புக்கோட்டை - 626 101.
தொலை பேச : 954566-228822.

நிர்வாக ஆசிரியர் : மதிகண்ணன்
(கலைவழி மக்கட்பணியம்)
துணை ஆசிரியர் : முரளி
ஆசிரியர் குழு : ஜெயராம்
ஜீவநேரு
அழகு பாரதி

கணினி : சுமதி மதி &
ஜெயசிவாஸ் லேசர்
பேச: 954566-226613

அச்சு : காயத்ரி அச்சகம்
பேச: 954566-225011

மதிப்புரைக்காக நூல் அனுப்புவோர் 2 பிரதிகளும் அறிமுகத்திற்காக எனில் ஒரு பிரதியும் அனுப்ப வேண்டும்.

படைப்புகள் படைப்பாளிகளின் கருத்துக்களையே முன்வைக்கின்றன. APPAவின் கருத்துக்களை அல்ல.

ஐந்து இதழ் சந்தா
உள்நாடு ரூ.50/-
இருபது இதழ்கள் ரூ.150/-
வெளிநாடு ரூ.300/-(ஐந்து இதழ்)
M.O நிர்வாக ஆசிரியர் பெயரில் அனுப்பவும்
D.D. என்றால் A.KANNAN (அல்லது) 'Action for People through Promotion of Arts' என்ற பெயரில் எடுக்கவும்

அன்பு நண்பர்களே...

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒருநாள் மதுரையில் ஒரு கலந்துரையாடலில் புதுக்கோட்டை தோழர் ஆசைத்தம்பி பேச்சின் போக்கில் ஒரு விஷயத்தைச் சொன்னார். கழிப்பறை கழுவும் திரவத்தில் இருப்பதைவிட அதிக அளவில் அமிலம் பெப்ஃசியிலும், கொக்கோ கோலாவிலும் இருப்பதாக. வெளிநாடுகளிலிருந்து நமக்குப் பொருட்களாகக் கிடைக்கின்றவற்றில் சாதகமான அம்சங்களைவிட பாதகமான அம்சங்களே அதிகம் என்பதுபற்றி நிறையப் பேசினோம். அவற்றில் சிலவற்றை சிலஇடங்களில் செயல்வடிவிற்கும் கொண்டு வரமுயன்றோம். அப்போது தேவையில்லாதவற்றைச் செய்வதாக எங்களிடம் கூறியவர்கள் இன்று ஒரு சில விஷயங்களை மட்டும் ஒத்துக் கொண்டுள்ளார்கள். ஒத்துக் கொண்டதில் மிக முக்கியமானது கழிப்பறை கழுவ அதற்கான மற்ற எதையும்விட பெப்ஃசியும், கொக்க கோலோவுமே சிறந்தது என்பதே. பண்ணாட்டு மூலதனங்கள் இந்திய மக்கள் நலனைவிட பன்னாட்டு முதலாளிகளின் நலனையே பிரதான இலக்காகக் கொள்ளும் என்பதை என்றும் நாம்...

தொடரும் உங்கள் ஆதரவிற்கு எங்களின் தோழமை விசாரிப்புகள்...

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

(திரைவிமர்சனம்)

# தீக்கொழுந்து

(விவரணப்படம்)

'மக்கள் கலை இலக்கியக் கழகம்' இயக்கி வெளியிட்டுள்ள திரை வடிவமான 'தீக்கொழுந்து' இரண்டு பாகங்களையும் ஒருசேரப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. நிகழும் சூழலில் குறிப்பிட்ட பிரச்சனைகளின் அடிப்படையில், பிரச்சனை சார்ந்த சம்பவங்களை தொகுப்பதும், ஒளியகமாக ஆவணமாக்கும் முயற்சியும் பரவலாக தொண்டு நிறுவனங்கள் மற்றும் சில தனி நபர்களின் உதவியோடு நடைபெறுவதை நாம் அறிவோம். 'பிரச்சாரம் மற்றும் கலை - இலக்கிய வெளிப்பாடுகளை அரசியல் போராட்டத்தின் தேவையாக கருதும் பொதுவுடைமை இயக்கங்க'ளில் ஒன்றான 'ம.க.இ.க.' ஆவணப்படுத்தும் முயற்சிகளின் வலிமையை தாங்களும் உணர்ந்து கையெடுத்து துவங்கியுள்ளனர். இதுவரையிலான ஆவணப் படங்களில் திட்டமிட்டு, குறிப்பிட்டு இதுதான் அரசியல் தீர்வு என்ற 'அரசியல் பார்வை' இல்லாமல் போனதைப் போல் இல்லாமல், இப்படம் தாம் முன்வைக்கும் அரசியல் பார்வையினூடாக இத்திரை முயற்சியை அமைத்திருப்பது குறிப்பிட்டு சொல்ல வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அந்த வகையில் தங்களின் 'வர்க்க - பொதுவுடைமை' அரசியல் நிலைபாட்டுக்கு நெருக்கமான ஒரு பிரச்சினையை இங்கே தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

**இதுவரையிலான ஆவணப் படங்களில் திட்டமிட்டு, குறிப்பிட்டு இதுதான் அரசியல் தீர்வு என்ற 'அரசியல் பார்வை' இல்லாமல் போனதைப் போல் இல்லாமல், இப்படம் தாம் முன்வைக்கும் அரசியல் பார்வையினூடாக இத்திரை முயற்சியை அமைத்திருப்பது குறிப்பிட்டு சொல்ல வேண்டிய ஒன்றாக இருக்கிறது.**

www.padippakam.com

இந்தியத் துணைக்கண்டம் என்பது, தனியார்மய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக வீழ்ந்து போன தேயிலையின் விலை வீழ்ச்சி, அதனூடாக ஏற்பட்டு உள்ள பொருளியல் நசிவு, தேயிலைத் தொழிலாளர்களின் வாழ்வு ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில்களில் ஏற்பட்டுள்ள சரிவு, தேசியஇன உற்பத்திகளின் மீதான நெருக்கடி, இந்நிலையில் இந்திய அரசின் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஆதரவான பொருளியல் கொள்கை 'சி.பி.ஐ., சி.பி.எம்.' போன்ற கட்சிகள் உட்பட்டு கட்சிகளின் துரோக நிலை முதலியவற்றை முன்னிறுத்தி இந்தப் பிரச்சனைகளின் ஓர் அடையாளமாக 'நீலமலை - தேயிலைத் தொழிலாளர்' பகுதியில் எடுக்கப்பட்ட திரைப்படமே இது. ஒரு வகையில் ஏகாதிபத்தியம் மற்றும் உலக வங்கிகளின் பொருளியல் சுரண்டல் தற்போது ஏற்பட்டுள்ள 'போனஸ் பிரச்சினை, விலைவாசி உயர்வு, அரசுத் துறைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான நிலை' என்ற இச்சூழல்களில் கவனிக்க வேண்டிய செய்தியாகவும் இப்படம் இருக்கிறது.

படத்தின் துவகமே இந்தப் பிரச்சனையைத்தான் பேசப் போகிறோம் என்ற குரலோடு துவங்குகிறது. தொடர்ந்து தேயிலை விலை வீழ்ச்சியை எதிர்த்துப் போராடிய நீலமலைத் தொழிலாளர்களின் போராட்டத்தையும் அதன்மீது பாய்ந்த அரசு வன்முறையையும் மேலும் 'வழக்கோடு தொடர்புடைய வழக்கறிஞர், பல்வேறு கட்சியினர், கிராம மக்கள், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்' ஆகியோரின் நேர்காணலோடு முதல் பாகம் முடிவடைகிறது. முதல்பாக நேர்காணலின் தொடர்ச்சியோடு மைய அரசின் நிலை, பிற மாநிலங்களில் வீழ்ந்துள்ள விலை, அதனால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை எனும் இவைகளோடு தேயிலைத் தொழிலாளிகள், ஆலை முதலாளிகள், அரசின் நிர்வாக அதிகாரி

ஒரு வகையில் ஏகாதிபத்தியம் மற்றும் உலக வங்கிகளின் பொருளியல் சுரண்டல் தற்போது ஏற்பட்டுள்ள 'போனஸ் பிரச்சினை, விலைவாசி உயர்வு, அரசுத் துறைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான நிலை' என்ற இச்சூழல்களில் கவனிக்க வேண்டிய செய்தியாகவும் இப்படம் இருக்கிறது.



படிப்பகம்

தேசியஇன சிறு உற்பத்தியாளர்களின் நேர்காணலினோடு, இரண்டாம் பாகத்தின் இறுதியில் தங்களுக்கான அரசியல் தீர்வை (அனைத்து வேறுபாடுகளையும் மறந்து வர்க்க அரசியல் தீர்வுக்குத் தயாராவது) கிராம மக்களின் குரலில் இருந்து வெளிப்படுத்தும் போது படம் முடிவடைகிறது. ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் இத்திரைப்படம் அணுகியுள்ள பிரச்சினைகளை,

1. தொழிலாளர்களின் நிலை மற்றும் அரசியல் கட்சிகள், அரசின் மாறுபட்ட நிலைகள்.

2. (இந்த நிலையில் வர்க்க சார்பான அரசியலே பிரதானமாகிறது. ஆகவே) தொழிலாளர்கள் ஒன்றுபடுதல்.

என இருநிலைகளில் அடக்கிவிடலாம்.

நிறைய ஓட்டுக்கட்சிகளை அவைகளின் கருத்துக்களின் மூலமே அம்பலப்படுத்துவது சிறப்பான ஒன்றாக அமைகிறது. குறிப்பாக 'தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்' பேசும்போது அவரது தி.மு.க. அரசு ஆதரவு பேச்சு இடைஇடையே, உண்மையில் அவர்களது செயல் 'மக்கள் விரோத'மாகவே இருப்பதைக் காட்டுவதும், "போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்குப் பக்குவம் போதவில்லை" என்று சொல்லும் 'பா.ஜ.க.' செயலாளரிடம் "உங்களை எம்.பி.-யாகத் தேர்ந்தெடுப்பதில் பக்குவம் உள்ளவர்களாக இருந்த மக்கள் தேயிலைக்கான போராட்டத்தில் பக்குவம் உள்ளவர்களாகத் தெரியவில்லை. அப்படித்தானே?" எனக் கேட்பதும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இப்படம் 'நீலமலை, குன்னூர், ஊட்டி' மற்றும் தொழிலாளர்களின் ஊர்ப்பகுதிகள், தோட்டங்கள், 'ஜெயலலிதா' 'சிவசேனை பால்தாக்ரே'யின் நட்சத்திர விடுதிகள் உள்பட பிறரின் பல எஸ்டேட்டுகள் தொழிற்சாலைகள் முதலிய பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் 'படகா, கவுடா, இருளர், தாயகம் திரும்பிய தமிழர்' ஆகியோர்களின் பேச்சு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இப்பிரச்சினையின் அரசியல் தீர்வாக தாம் கருதும் 'வர்க்கத் தீர்வு' என்பதை நோக்கியே படம் நீளுகிறது. அதற்கேற்போல உரையாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும், இப்படத்தில் கையாளரப்பட்டுள்ள கலை ரீதியான முயற்சிகள் பற்றிச் சில பேச வேண்டியுள்ளது.

நீலமலையின் நீண்ட மலைத்தொடர் அழகான தேயிலைப் பச்சை இலைகள், தேவையில்லாமல் நீண்ட சாலையில் நீண்ட நேரம் பயணிப்பது, பின்னால் ஒலிக்கும் இனிமையான இசை, தொர்ந்து படத்தின் இடையிடையே இவ்வாறே செய்வது என்பது தாம் பேச எடுத்துக்கொண்ட கருத்தியலின் தீவிரத்தைக் குறைப்பதாகவே அமைகிறது. படம் முடிந்ததும் இந்நிலைக்குக் காரணமான சமூக அரசியல் சூழல்களின் மீது கோபம் இல்லாமலே போகிறது. 'சாதாரணமாக ஒரு மனப்பதற்றம்' கூட இல்லாமல் போகிறது. 'கலை, என்பது பற்றி படக்குழுவினர் என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால், கலை முயற்சிகள் என்பது உள்ளலையாக நிற்க முடியுமே தவிர துண்டாக நிற்க முடியாது. பிறகு படத்தொகுப்பில் பிரச்சினை இருக்கிறது. நீண்ட உரையாடலில் பிரச்சினையின் பிரதான அம்சங்கள் மட்டுமே தொகுக்கப்படுவது பிரச்சினை இல்லை. ஆனால் பேச்சின் முழுமை நிறைவு பெறும் முன்பே வார்த்தைகள் துண்டிக்கப்படுவது கருத்தைப் பாதிக்கிறது. மேலும், படத்தின் இடையில் வரும் பாடல்கள் பிரச்சினைக்குத் 'தோதானதாக' அமையவில்லை. கூடுதலாக, படகா இன மக்களின் பாடல் இது எனக் கேட்பதைவிட அந்தப்பாடல்களின் இசைவடிவில் இயக்கப்பாடலை அமைத்து 'டைட்டிலோடு' நிறுத்திக் கொண்டு இருக்கலாம். நீலகிரிப் பகுதி தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து சற்று வேறுபட்ட பகுதி இங்கு 'தமிழகத்தில் இல்லாத நிலவியல் சூழல், தமிழகத்தில் இல்லாத சில சாதிகள், குழுக்கள், இனங்கள், சடங்குகள்' உள்ளன. இந்த நிலையில் இவர்களுக்கிடையேயான அரசியல் உறவு மனித உறவுகள் என்பதற்றோடுங்கூட அணுகியிருக்கலாம். (தமிழக இயக்கங்களால்கூட கண்டுகொள்ளப்படாத இப்பிரச்சினை 'தேவகவுடா' போன்ற கர்நாடக தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட காரணங்கள் அவையாக இருக்கலாம். அது சரியானது / தவறானது என்று எதுவாயிருந்த போதிலும்)

அடுத்து இப்படத்தில் கையாண்டிருக்கும் கருத்தியல் குறித்து சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. வர்க்கப் பிரச்சினையைப் பற்றி பேசுவது பிரச்சினை இல்லை என்றாலும் அதை மட்டுமே பேசுவது குறித்தும் பேச வேண்டியிருக்கிறது. இந்தியச் சூழலில் வரக்கம் என்பது வேறு சில அடையாளங்களோடும் நிலவி

www.padippakam.com

வருகிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அத்தகைய சில பிரச்சினைகள் கூடுதல் ஆக்கப்பட்டு நடைமுறை வாழ்வின் பகுதிகளாக இணைக்கப்பட்டு ஒடுக்கு முறையின் பல்முனைக் காரணிகளாக உள்ளது. ஒரு குறைந்தபட்ச அரசியல் தன்மையுடன்கூட சாதி, பெண்கள் மீதான வன்முறை, அடிப்படை வசதியின்மை முதலியவை இப்படத்தில் பேசப்படாமல் போய்விட்டது. தொழிலாளர் ஒற்றுமையை சீர் குலைக்க அரசு சாதிய பிரச்சினையைத் துண்டியது என படத்தில் ஓர் இடத்தில் பேசப்பட்டுள்ளது. சமூகத்தில் 'சாதிய மனோபாவம்' இயங்குவதால்தான் தூண்டிவிட முடிகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியச் சூழலில் சாதிய ஒழிப்பின் நிழலில்தான் வர்க்க ஒற்றுமை சாத்தியப்படுமே தவிர சாதியை ஒழிக்காமல் வெறும் வர்க்க ஒற்றுமை என்பது நடவாத ஒன்று.

தேயிலைத் தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை நிர்வாணமாக அழைத்துச் செல்வதைக்காட்டி ஏற்கனவே, "தாமிரபரணி பதினேழு பேர் படுகொலை"யை ஒன்றுபடுத்தி அதையும் வர்க்க அரசியலுக்குள் உள்ளடக்கி 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என்று ஒரே ஒரு இடத்தில் 'மருதையன்' அவர்களின் குரல் ஒலிப்பதோடு சரி. (தாமிரபரணி பிரச்சனையில் 'ம.க.இ.க.' வின் அக்கறையை மறுக்க முடியாது என்றாலும் இதை நாம் இங்கே சுட்டிக்காட்ட வேண்டி உள்ளது) ஒரு வகையில் இவைகளைப் பற்றிப் பேசுவது என்பதுகூட ஒடுக்குமுறை அரசியலை எதிர்ப்பதுதானே.

ஆவணப்படங்கள் பல இயக்கப்படும் இச்சூழலில் தீக்கொழுந்தையும் நாம் பொருத்தி மதிப்பிடுவோமானால் அரசியல் கருத்தைத் தாண்டி, தான் சொல்ல வரும் கருத்தை மக்கள்மயப்படுத்த வேண்டுமானால் அது சில வடிவரீதியான நிலைகளில் முன்னேற வேண்டியிருக்கிறது எனலாம்.

மற்றபடி முதல் முயற்சி என்ற நிலையில் வேறு எந்த படத்திற்கும் அமையாத அரசியல் தீர்வை இப்படம் பேசுகிறது. அது இன்னும் சில இந்தியச் சூழல்களுக்கே உரிய பிரச்சினைகளையும் அதனதன் தன்மையில் அணுகும் பொழுது சமூகப் புரட்சியின் தொடக்கப் புள்ளியை மிகத் தீவிரமாக கண்டடைய முடியும்.

**- ஸ்டாலின் ராஜாங்கம்**



படிப்பகம்

www.padippakam.com

(09-12-2001 அன்று நடந்த 'இன்றைய இலக்கியத்தின் போக்கும், சிறுபத்திரிகைகளின் போக்கும்' கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை - தமிழில் நவீன எழுத்துக்களின் போக்கு பற்றி - கடந்த இதழ் தொடர்ச்சி)

# சொர்க்கத்தின் அரசாங்கம்

-மதிகண்ணன் (கதவு காலாண்டிதழ்)

இலக்கியம் ஆதிமுதல் அதுதன் வடிவத்தாலும், உள்ளடக்கத்தாலும், வெளிப்பாட்டு முறையினாலும் தன்னை மாற்றத்திற்கு உட்படுத்தியே வந்திருக்கிறது. ஆனால், 1911 இன் பின்னர் மேற்கத்திய இலக்கிய உலகில் நவீனத்துவ எழுத்துமுறை அடையாளப்படுத்தப்பட்டு, அப்படியான எழுத்தாளர்கள் எனச் சிலர் அடையாளம் காட்டப்பட்டனர். தமிழ் நாட்டிலும்கூட நவீனப் படைப்பு இது என வாசகர்களைப் பயமுறுத்தியதும், ஒரு சிலரை அடையாளம் காட்டி இவர்கள் நவீனப் படைப்பாளர்கள் என அவர்களில் சிலரையே பயமுறுத்திய நிகழ்வுகளும் 80களின் ஆரம்பத்தில் நிகழ்ந்தேறின.

நடப்பியலின் சாத்தியமின்மைகளைச் சாத்தியப்படுத்துவதற்காக உருவான நவீனத்துவத்தை அசாத்தியமான ஒன்றாகக் காட்டும் முயற்சி தமிழ் இலக்கிய உலகில் ஆரம்பத்தில் மட்டுமன்றி இன்றுவரை நடந்தேறி வருகிறது. ஆனால், படைப்பு சாத்தியமான ஒரு படைப்பாளிக்கு நவீனப் படைப்பும் சாத்தியமே.

*'யதார்த்தவாதம் தனக்குள்ளே சில சிக்கல்களைச் சந்தித்தது. இந்தச் சிக்கல்களிலிருந்து வெளியேறும்போது நவீனத்துவம் வந்து சேர்கிறது',*

*'நவீனத்துவத்தில் மனிதன் மையமாகிறான். மனித வாழ்விற்கு ஒற்றைப் பரிமாணத்தில் பொருள்கூற முடியாது. வாழ்க்கை நேர்கோட்டில் இல்லை. குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்படுவது வாழ்க்கை. பின்னலின் ஏதோ ஒரு இடத்தில் மனிதன் இருக்கிறான். ஒரே சமயத்தில் 'இவன் எல்லா இடங்களிலும் இல்லை. இவன் பின்னங்களில் இருக்கிறான். குறிகளில் இருக்கிறான். படிமங்கள், குறியீடுகள் என்பதாய் வாழ்க்கை அவனுக்குப் புலப்படுகிறது. வரலாற்றின் இறுக்கங்கள் அவனுக்குத் தளர்கின்றன. இறந்த கலை வரலாறும் இவன் பொருள்படும் விதத்தில் இவனுக்கு நெருக்கமாய் வந்து விடுகிறது. தர்க்கங்களை இவன் நம்பவில்லை. தர்க்கங்களிலிருந்து, தத்துவங்களிலிருந்த இவன் தன்னை விடுவித்துக்*

*கொள்கிறான். பகுத்தறிவின் வன்முறையை இவன் புரிந்து கொள்கிறான். அறிவின் ஆதிக்கத்தை இவன் நம்பவில்லை. இத்தகைய போக்கு நவீனத்துவம்'*[2]

இத்தகைய கருத்துக்களோடு *'சங்கப்புலவன் இன்று யாரேனும் உயிரோடு வந்தால் இன்றைய நவீன தமிழ்க் கவிதைகள் எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன எனக் கேட்பான்'*[3] என்ற கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கதே. ஏனெனில், *'சொல்வதில் யுக்தியும், வடிவங்களில் பல்வேறு பழமைகள் தவிர்த்து, நவீன கவிதைகள் தனக்கான பாடுபொருளாக சமூகத்தின் நுண்ணிய பரப்புகளில், தனிமனித அகக்கூர்மையில் பாசங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது'*[4] அதற்கான மொழியை உருவாக்குவதற்காகவே நவீன படைப்புகள் வார்த்தைகளை உடைத்துச் சிதைத்து படிமப்படுத்தி புதிய வார்த்தைகளை தனக்கானதாக உருவாக்கிக் கொண்டுள்ளன. நவீனப் படைப்புக்ள் சில நேரங்களில் புரிய முடியாமல் போவதற்கு *'புரிவதை அல்ல... புரிய முடியாததை உருவாக்குவதே படைப்பாளியின் குணமாக இருக்கிறது. ஆனால், மொழியில் கட்டப்பட்ட மனிதன் இப்படி ஒன்றும் இல்லாமல் ஆவியாக எவ்வளவு நேரம் அந்தரத்தில் தொங்க முடியும்? என்ற வினாவும் அழிக்க முடியாதபடி நிற்கிறது. என்றாலும், எல்லாவற்றையும் அழித்து ஜீரணிக்கும் மண்ணுக்குள் இருந்து சொல்லி மாளாத பன்முகப்பட்ட உயிரசைவுகள் சாத்தியமாவதைப் போல இந்த வகையான புதிய எழுத்துக்கள் மூலமும் சாத்தியமாகலாம்'*[5]

மனிதனைப் பொருத்தவரை அறிவுத்தளத்தில் மட்டுமல்லாமல் அவனது இயக்கம் உணர்வுத் தளத்திலும் நிகழ்கிறது. இது, பொதுவான ஒன்று என்றாலும்கூட அதன் உட்கூறாய் நவீனத்துவ அறிவு, நவீனத்துவ உணர்வு எனப்பார்த்தோமேயானால், *'இயந்திரம் பற்றி மார்க்ஸ் விளக்கும்போது - சமூக உணர்வுகளின் ஒரு தொகுப்பு - என்று சொல்வதை நவீனத்துவ உணர்வில்லாமல் புரிந்து கொள்ளமுடியாது'*[6]

இப்படியான உணர்வுகளும்கூட அனுபவத்தின்பாற் பட்டதே. பாட்டி வடை சுட முன்பு காக்கையும், பின்பு நரியும் ஏமாந்த கதையை குழந்தைகள் வேண்டுமானால் காக்கையாகவும், நரியாகவும் புரிந்து கொள்ளலாம். ஆனால், இரண்டு கதைகளிலும் ஏமாந்த பாட்டி பற்றிய சிந்தனை நமக்கு இன்றைக்கு வருவது உணர்வின்பாற்பட்டதே. அந்தப் பாட்டியாக இங்கு யார் அடையாளப்படுத்தப்படுகிறார்கள் என்பது, அவரவர் அனுபவம், அரசியல் கண்ணோட்டம், சமூகம் பற்றிய புரிதல்

www.padippakam.com

மற்றும் நவீனத்துவ உணர்வின்பாற்பட்டது. எல்லோர் சிந்தையிலும் ஒரே அடையாளமாகப் பாட்டி இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால், இந்தக் கதையில் காக்கை பேசுமா? நரி பேசுமா? என்ற தர்க்கங்களைத்தான் உள்ளடக்கப் புரிதலை மறுக்கின்ற பகுத்தறிவின் வன்முறை என்போம். உரிய இடங்களில் பகுத்தறிவைச் சரியாகப் பயன்படுத்தத் திராணியற்று காக்கை, நரி, பாட்டி கதையில் பகுத்தறிவைப் பயன்படுத்த முனையும்போது பகுத்தறிவின் வன்முறை, எல்லா வன்முறைகளையும் போல அழிவைத்தான் தரும்.

*'இலக்கிய ஆய்வு என்பதை இலக்கியத்தின் உத்திகள், கதைப்போக்கு, கற்பனை வளம், யதார்த்தவாதம் என்ற அளவில் மட்டுமே குறுக்கிவிட இயலாது. இலக்கியம் என்பது வாழ்வியலின் ஒரு படைப்புக்கூறு. வரலாற்று இயக்கத்தின் ஒரு நீரோட்டம். சமூகம் மற்றும் வரலாற்றுச் சூழலில் மனிதன் தன்னைத்தானே தேடிக்கொண்டிருக்கும் ஒரு மெய்யியல் நெறி. இறுதியில் விடுதலைக்கான ஒரு நெறி',* ஆய்விற்கான கூறுகள் இவை எனும்போது, அவை படைப்பில் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், பல நேரங்களில் நடப்பதென்பது வேறாகவே இருக்கிறது.

நவீனப் படைப்புகள் என்ற அடைமொழியுடன் வரும் படைப்புகள் பலவும், வடிவாக்கம், உத்திகள், வார்த்தைப் பயன்பாடு இவற்றில் செலுத்தப்பட்ட கவனத்தை உள்ளடக்கத்தில் செலுத்துவதில்லை. உடலுறுப்புகளின் பெயர்களை, குறிப்பாக பாலியல் வகைப்பட்ட வார்த்தைகளை தேவையினடிப்படையிலில்லாமல் எழுத வேண்டும் என்பதற்காகவே எழுதுகின்ற போக்கும் நிகழ்கிறது. பிரேதா-பிரேதனின் உடல் சார்ந்த மொழியினைப் பற்றிய சரியான புரிதலின்றி பிறரால் அதேபோல எழுதப்படும் எழுத்துக்களும் உண்டு. தேவையினடிப்படையில் சரியான புரிதலுடன் படைக்கப்பட்ட படைப்புகளும் உண்டு.

*நீ புறக்கணித்தென்னை*
*தூக்கியெறிந்த இடம்*
*இலந்தை முட்களடர்ந்த*
*இடுகாட்டுப் பிணங்களின் கழிவுக் குழி.*

*மௌனத்தை கொல்கிற ஆவேசத்தோடு*



படிப்பகம்

www.padippakam.com

மண்டையோடுகள் சிரிக்க
அழுகி நாற்றமடிக்கும் பிணக்கழிவில்
முட்கள் கிழித்து குருதி கசியுமென்
உடம்பைத் துடைத்தபடி
வழுக்கி வழுக்கி வீழ்ந்து
மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு வேளை
நான் உயிர்பிழைத்தெழுந்து வந்தால்
உன் கூரிய நகங்களால்
என் இதயத்தைக் கிழித்து
துஷ்ட தேவதைகளுக்கு பலியிடு
ஒரு சூனியக்காரியைப் போல.

இல்லை
உன் வலுவெல்லாம் திரட்டி
மூளை சிதற என் கபாலத்தை உடைத்தெறி
என் கதியை எல்லோரும்
எப்போதும் நினைத்திருக்கும்படி
மண்டையோடு சிதைந்த
என் பிணத்தின் மீது கால் வைத்து
மயானத்தில் ஒளிந்திருக்கிற
பேய்களும், பிசாசுகளும்
பயந்து நடுங்கியோட கூக்குரலிடு
இனி
நேசத்தைச் சொல்கிறவர்களின்
நாக்குகள் அறுக்கப்படுமென. [8]

இந்தக் கவிதையில் உடல் மொழி, வார்த்தைகளாகப் படிமப்பட்டுள்ளது. பொதுவாகவே நாம் நீண்ட நாட்களுக்குப் பிறகு நம் நண்பரைச் சந்தித்தால் சொல்லும் வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம். 'அப்படியே கடிச்சுத் திங்கலாம்போல இருக்கு'. யார் மீதாவது கோபம் என்றால்தானே கடிக்க வேண்டும். இந்தக் கடி



படிப்பகம்

அன்புக் கடி. கோபக் கடிக்கான வார்த்தைகள் வேறு. 'அப்படியே கடிச்சுத் துப்பலாம் போல இருக்கு' என்பவை. அவை அன்பையும் துப்புவது வெறுப்பையும் காட்டினாலும் இங்கு உணர்வின் வெளிப்பாடாய் கடிப்பது என்பது உறுதியாகிவிட்டது. இந்தக் கவிதையைப் படிக்கும்போது இப்படிப்பட்ட உணர்வுகளுக்குள் இருந்தால், இந்தக் கவிதையின் குறி தவறவில்லை. உடலின் மொழியினைப் படிமமாக்கி காதல் பற்றிப் பேசும் வார்த்தைகளை நாம் கேட்க அல்ல பார்க்கலாம்.

இதேபோல், வீறு என்று தலைப்பிடப்பட்ட கவிதை

*'அவன் தேவை என்ன?*
*முலைகளாயின்*
*திருகி எறிந்து விட்டுவா*
*எரிந்து சாம்பலாகட்டும்.*
*இடுப்பு வளைவும்*
*நாபிக் குழியுமானால்*
*கழட்டி போட்டுவிடு*
*தூக்கி ஓடட்டும்.*
*யோனி கேட்டால்*
*வெட்டிக் கொடுத்து விடு*
*உதடு கண் காது மூக்கு*
*பிருஷ்டம் தொடை கால்*
*உதறிவிட்டு வா.*
*இவையாவும் தாண்டியே*
*இருக்கிறாய் நீ*
*உயிர்ச் சோதியாய்*
*அணுக்களிலும்",*

இந்தக் கவிதையில் தமிழில் யதார்த்தப் படைப்பாளிகளால் காலங்காலமாக கெட்ட வார்த்தை என ஒதுக்கி வைக்கப்பட்ட அனைத்து வார்த்தைகளும் இருந்தாலும், விரசம் இல்லை. உயிரும், உணர்வும், விடுதலைக்கான தோழமையும் இருக்கிறது. ஆனால், யதார்த்தப் படைப்பாளி(?) என சொல்லிக் கொள்ளும் எழுத்து வணிகர் ஒருவர் இரண்டு நல்ல வார்த்தைகளைச் சேர்த்து 'மாடிப்படிகளில் குலுங்கினாள்' என்று எழுதும்போது நம் கண்முன் என்ன தெரிகிறது.

www.padippakam.com

எந்த ஒரு படைப்பின் பின்னாலும், ஏதாவது ஒரு இனத்தின் குரல் - அரசியல் இருக்கும் என்பார் லெனின். நவீன படைப்பு என்ற பெயரில் ஒலிப்பது எந்த இனத்தின் - வர்க்கத்தின் குரல், வெளிப்படுத்தும் அரசியல் என்ன என்பதை அறியமுடியா வகையிலும்கூட சில படைப்புகள் வருகின்றன. ஒரே படைப்பாளியின் பல்வேறு படைப்புகளிலும் ஒத்த இனத்தின் (ஒடுக்கப்பட்ட, பெண், தலித், குழந்தைகள் போன்ற) குரல் வெளிப்படலாம். ஆனால், ஒரே படைப்பாளியின் இருவேறு படைப்புகளில் எதிரெதிரான இருவேறு இனத்தின் குரல்கள் ஒலிப்பது கூடவேகூடாது. சிலருடைய படைப்புகளில் ஒரே படைப்பின் உள்ளேயே இரு எதிர் எதிர் கருத்துகள் வெளிப்படுவதுடன் இரண்டு கருத்துகளும் அழுத்தமாகவே முன் வைக்கப்படுகின்றன.

*'இடிவிழக் கூடிய இடங்கள்*
*குழந்தைகளற்ற தெருக்கள்*
*தாகம் கொண்டவர்களுக்கு*
*தண்ணீர் தர மறுக்கும்*
*பொல்லாதவர்களின் வீடுகள்'*[10]

இக்கவிதையில் நாட்டுப்புற வழக்கில் யாரையும் திட்டும்போது சொல்லும் உன் தலையில் இடிவிழ என்ற வார்த்தைகளுக்கான இடத்தை கவிஞர் தேர்ந்தெடுத்துள்ளார். குழந்தைகளின் மீதான அன்பும் சாதிப் பெயர் சொல்லித் தண்ணீர் தர மறுப்பவர்கள் மீதான கோபமும் ஒரே இடிவிழுதலில் வெளிப்படுகிறது.

*'ஒரு குழந்தை மரிக்கும்போது*
*எல்லோரும் யாருடைய மரணம்*
*யாருடைய மரணமென்று கேட்கிறார்கள்.*
*பிரபஞ்சம்*
*என்னுடைய மரணம்*
*என்னுடைய மரணமென்று*
*ஓயாமல் கதறுகிறது'*[11]

தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் எனும் பாரதியின் வரிகளைப் படிக்கும்போது ஏற்படும் அதே உணர்வு இந்த வரிகளைப் படிக்கும் போதும் ஏற்படுகிறது. 1989இல் உருவாக்கப்பட்டு 1992 இல் இந்தியாவும் கையெழுத்திட்ட



படிப்பகம்

www.padippakam.com

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைக்கான உடன்படிக்கையில், உயிர் வாழ்வதற்கான உரிமையும் ஓர் குழந்தையின் உரிமையாகக் கூறப்பட்டுள்ளது. இக்கவிதையில் ஒரு குழந்தையின் மரணத்தை பிரபஞ்சம் தன்னுடைய மரணம் எனக்கதறும் அளவிற்கான அதீத புனைவு இக்கவிதையை நவீனப்படுத்தியது.

நேரடியாக, நேரிடையாக உள்நுழைய வாய்ப்பில்லா இடங்களிலும், வாய்ப்பு இருந்தாலும்கூட விருப்பமில்லாத இடங்களிலும், படிமங்களாக - குறியீடுகளாக நவீனப் படைப்பு பாய்கிறது. புதிய ஏற்பாடு எனும் தலைப்பிலான கவிதை,

*நெடுநாள் முன் நிகழ்ந்த*
*புத்தரின் புன்னகைக்கு*
*தாமதமாகவே*
*சக்தியிடமிருந்து சமிக்ஞை*
*கிடைத்தது.*

*பொக்ரான் அதிர்ச்சியில்*
*வாஷிங்டனில் தொங்கிய*
*ஏசுவின் சிலுவை விரிசலுற்றது.*

*கோபமுற்ற ஏசு*
*இந்தியாவை இழுத்துவந்து*
*சிலுவையிலிட்டார்.*

*மோனிகாவின் கண்ணடிப்பால்*
*கலைந்து போன தவம்*
*சாபமாய் மாறி*
*போய்விழுந்தது சூடானில்.*

*துகள்கள் கம்யூனிஸ்ட்டுகளின்*
*கண்களை உறுத்தி*
*அவர்களால் காண*



படிப்பகம்

*இயலவில்லை*
*அருகில் கிடந்த*
*செம்மணிக் குழிகளை* 12

சர்வதேசிய அரசியலுடன் அண்டை நாட்டு மற்றும் உள் நாட்டு அரசியலையும் சேர்த்துப் பேசும் இக்கவிதை யதார்த்தக் கவிதையாய் இருந்தால் அது கவிதையாகவே இருக்க வாய்ப்பில்லை. நவீன கவிதை ரௌத்ரம் பழகும் உணர்வு வெளிப்பாடாய்,

*அவனைப் பேசவிடுங்கள்*
*அவன்*
*பேசட்டும்*

*அவனைச் சிரிக்க விடுங்கள்*
*அவன்*
*சிரிக்கட்டும்*

*அவனை அழ விடுங்கள்*
*அவன்*
*அழட்டும்*

*ஆனால்,*
*இவை*
*அவனுக்காக மட்டுமென்றால்*

*அவனை*
*இறக்க விடுங்கள்*
*இறந்து போகட்டும்.* 13

கோபப்பட முடியாத நிலையில் விரக்தியுடன, ஆதிக்கத்தின் அடியால்பட்ட வேதனையையும் சேர்த்து வெளிப்படுத்தும்,

*நூலுக்குச் சாயமேற்றத் தொடங்கி*
*கடைசியில்*
*நதிக்குச் சாயமேற்றி முடித்தார்கள்* 14

*சமத்துவபுரம்*
*கழிவு நீர் சுத்தம் செய்ய*
*அதே கருப்பன்* [15]

*உருண்டோடும் மனிதத் தலைகள்*
*போலீஸ் காவல்*
*சிலைக்கு* [16]

*சலவைத் தொழிலாளி*
*வாழ்க்கை மட்டும்*
*சுருக்கம் நிறைந்த அழுக்கோடு* [17]

மேற்சொன்ன அனைத்து எடுத்துக்காட்டுகளையும் எழுதியவர்கள் நவீனப் படைப்பிற்கு நானே ஆதாரம் என மார்தட்டாதவர்கள். ***'Everything which does not kill me makes me stronger'*** [18] என்னைக் கொல்லாத ஒவ்வொன்றும் என்னை வலுவடையச் செய்கிறது என்பது தனி மனிதனுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கு மட்டுமல்ல. நவீன இலக்கியத்திற்கும், நவீன கலைகளுக்கும் பொருந்தும். உள்ளடக்கத்தைச் சிதைக்காத வடிவம் தேவை. வடிவில், வெளிப்பாட்டு முறையில் செலுத்தும் கவனம் எந்தச் சூழ்நிலையிலும் புரியாமைக்கும், கருத்துச்சிதைவிற்கும் வழி வகுத்துவிடக்கூடாது 'ஹே ராம்' திரைப்படத்தைப்போல.

***'It is a tale told by an idiot,***
***full of sound and fury***
***signifying nothing'*** [19]

தாராளமயம், தனியார்மயம், உலகமயம் போன்ற சிக்கல்களிலிருந்து சாதாரண மக்களைக் காக்க வேண்டிய கடமை நம் தேசத்திற்கு உள்ளது என குடியரசுத்தலைவர் உரையாற்றும் நிலையில் உள்ள நம் நாட்டில்... மனிதன் முதலாளித்துவத்தின் வளர்ச்சியால் சக மனிதனிடமிருந்தும், சமூகத்திடமிருந்தும், இயற்கையிடமிருந்தும் மேலும் மேலும் அந்நியமாகிக் கொண்டே வருகிறான். இயந்திரமய வாழ்க்கைக்கு தள்ளப்பட்டு தானும் ஏறக்குறைய இயந்திரமாகிவிட்டான். பயங்கரவாதம் தலைதூக்குகிறது. பயங்கரவாதத்திற்கெதிராக எனும்

பெயரில், ஒருங்கிணைக்கப் பட்ட அங்கீகாரம் பெற்ற பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்படுகிறது. இருந்தாலும்கூட நம்பிக்கை இருக்கிறது.

***'A moment always comes***
***when people stop fighting and***
***tearing each other to pieces,***
***And finally***
***agree to love each other***
***for what they are.***
***It is the kingdom of Heaven'*** [20]

அப்படிப்பட்ட சொர்க்கத்தின் அரசாங்கத்தை நோக்கிப் புதிய நவீன படைப்பாளிகளின் படைப்புகள் சமூக அக்கறையோடு, ஒட்டுமொத்த மேம்பாட்டை மையப்படுத்தி முன் நகரட்டும்.

அடிக்குறிப்புகள்

*1. 2. ஞானி - தமிழில் நவீனத்துவம் பின்-நவீனத்துவம்*
*3. 4. யவுனிகா ஸ்ரீராம் - நவீன கவிதையின் புரிதல் - கதவு இதழ்4*
*5. புத்தூர் க.பஞ்சாங்கம் - தமிழ் நாவலின் புதிய எழுத்து முறைகள் - கதவு இதழ்3*
*6. ஞானி - தமிழில் நவீனத்துவம் பின்-நவீனத்துவம்*
*7. ஞானி - தமிழில் நவீனத்துவம் பின்-நவீனத்துவம்*
*8. க. விவேகானந்தன் - கதவு இதழ்6*
*9. அன்புச் செல்வன் - வீறு -கதவு இதழ்5*
*10. பாலை நிலவன் - கடல் முகம் கவிதைத் தொகுப்பு*
*11. பாலை நிலவன் - கடல் முகம் கவிதைத் தொகுப்பு*
*12. சுகுணா - புதிய ஏற்பாடு - கதவு இதழ்6*
*13. அழகு பாரதி - திசையறிந்து கவிதைத் தொகுப்பு*
*14. சகாரா - நதிக்கதையில் தொலைந்த மணல் கவிதைத்தொகுப்பு*
*15. 16. 17. பாலபாரதி - இதயத்தில் இன்னும் ஹைகூ தொகுப்பு*
**18. Albert Camus - Carnets (the diary of Albert Camus)**
**19. Sheakespeare (collecttion of Sheakespeare)**
**20. Sheakespeare (collecttion of Sheakespeare)**

www.padippakam.com

# 'ப்ரேக் டவுன்'

-கு.பாலசுப்ரமணியன்

பாண்டீஸ்வரி சந்தோஷமாக நின்றிருந்தாள். கையில் ஒரு வயர் கூடை. அதில் அரை பாக்கெட் முறுக்கு. டிபன்பாக்ஸில் தயிர்சாதம், ஊறுகாய், கொஞ்சம் சில்லரைகளோடு ஜவுளிக்கடை பர்ஸ். அவளிடம் இருந்ததிலேயே நல்ல பாவாடை சட்டை அணிந்திருந்தாள். கத்திரிப்பூ கலரில் பூப் பூவாய். முகத்தில் பவுடர் கொஞ்சம் அதிகம். பக்கத்தில் அவள் அப்பா. வழக்கமான கிராமத்து ஆள். பீடியை ஒரு இழுப்பு இழுத்து, இருமி புகையோடு காறித் துப்பினான். மகள் பக்கம் திரும்பி, "ஜாக்கிரதையா போய்ட்டு வரனும், கூட வர்ற பிள்ளைகள விட்டுட்டு எங்கயும் போய்ரக் கூடாது" என்றான். தூரத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வேன் வந்து கொண்டிருந்தது.

"நீதாம்மா இந்த ஸ்கூல்ல நல்லா படிக்கிற பொண்ணு. ஆறாம் வகுப்புல போய் நல்ல மார்க் எடுக்கணும். நம்ம ஸ்கூலுக்கு பேர் வாங்கித் தரணும்" டி.சி.யை கையில் கொடுத்து கோமதி டீச்சர் சொன்னார். பாண்டீஸ்வரி "சரிங்க டீச்சர்" என்றாள். புதிய பேனா ஒன்றை கொடுத்து "இது என் பரிசு" என்றார் டீச்சர். பாண்டீஸ்வரி இருகை நீட்டி பெற்றுக் கொண்டாள்.

வேன் வட்டமடித்து நின்றது. வேனில் ஏறியவர்களில் பாவாடை சட்டை அணிந்திருந்தது பாண்டீஸ்வரி மட்டும்தான். மற்றவர்கள் தாவணியில் இருந்தார்கள். பாண்டிக்கும் தாவணி போட கொள்ளை ஆசை. அரக்கு கலரில் சரிகை போட்ட பாவாடையும் சந்தனக் கலர் தாவணியும் உடுத்தி இரட்டை சடை போட்டு அவள் கனவில் அவளே வருவாள். அம்மாவிடம் கேட்டால் குட்டு விழும். "இப்பவே என்னடி தாவணி வேண்டிக்கிடக்கு. ஏற்கனவே நிக்கிற ரெண்டையே கரையேத்த வழியில்ல". அம்மா வாயைத் திறந்தால் மூடவே மாட்டாள்.

வேன் போய்க் கொண்டிருந்தது. 'மல மல மருதமல' ஸ்பீக்கரில் கசிந்து கொண்டிருந்தது. டிரைவர் ஒரு கையால் தாளம் போட்டுக் கொண்டு, ஓரப்பார்வையால் பக்கத்திலிருந்த பெண்ணைப் பார்த்தான். அந்தப் பெண் கீழ்ப்பார்வையால் அவனைப் பார்த்து சிரித்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

வேனுக்குள் பேச்சும், கும்மாளமுமாய் உற்சாகம் பொங்கி வழிந்தது. பாண்டி ஆச்சரியமாகவும் வினோதமாகவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். மில் காம்பவுண்டிற்குள் வேன் நின்றது. பெரிய, பெரிய கட்டிடங்கள். விதவிதமான மரங்கள், பூச்செடிகள். அவள் வேறு உலகத்தில் நிற்பது போல் உணர்ந்தாள். அங்கிருந்த எல்லாமே அவளுக்கு வியப்பையும், பிரமிப்பையும் தந்தன.

ஒரு வாரம் எவ்வளவு சீக்கிரமாக ஓடுகிறது. பாண்டிக்கு எல்லாமே பழகி விட்டன. வேன் டிரைவரிலிருந்து, வாட்ச் மேன், சூபர்வைசர் என்று எல்லா ஆண்களின் வித்தியாசப் பார்வை அவளுக்கு புரிந்தும் புரியாமலும் இருந்தது. ஏதோ ஒன்றை இழந்து விட்டது போன்ற வெறுமை மனசுக்குள்.

அதிகாலை 4 மணிக்கு அவசர அவசரமாய்க் கிளம்பி, இயந்திரங்களின் நடுவில் பொழுதைக் கழித்து இருட்டியபின் வீடு திரும்பி, இரவுச் சாப்பாட்டை சாப்பிட்டும் சாப்பிடாமலும் அசதியில் தூங்கி, மறுநாள் அதிகாலை 4 மணிக்கு அவசர அவசரமாய்... ... ... பாண்டிக்கு இந்த வாழ்க்கை அலுத்து விட்டது. ஏன் வெறுப்பும்கூட வந்து விட்டது.

மதியம் சாப்பிடுகின்ற வேளையில் பள்ளி ஞாபகம் வரும். வட்டத்தில் நின்ற பாடல் பாடி ஆடியது. போட்டி போட்டு மனப்பாடப் பாடல் ஒப்பித்தது, தோட்டத்தில் புடலை, சுரை விதை ஊன்றித் தண்ணீர் ஊற்றியது. எல்லாவற்றிற்கும் மேலாய் கோமதி டீச்சர். எந்நேரமும் புன்முறுவலுடன் அந்த முகம். கவர்ச்சியான நிறமோ, உருவமோ இல்லை. ஆனாலும், நினைவை விட்டு அகலாத முகம். 'நல்லவங்களா இருக்குறதால அழகாத் தெரியிறாங்களோ'

"எவ்வளவு நேரம் திங்கிறதுக்கு ம் ... சீக்கிரம் சீக்கரம்" மேஸ்திரியின் குரல் கேட்டு சட்டென்று சுயநினைவுக்கு வருவாள்.

மழை பெய்து கொண்டிருந்தது. கூரை வீட்டினுள் சிம்னி விளக்கொளியில் பெரிது பெரிதாய் நிழலுருவங்கள். பாண்டியும், அவள் அம்மாயியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சுடு சோறும், கீரைக் குழம்பும் மழைக்கு இதமாயிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

"ஏன் அம்மாயி, என்னப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பல" பாண்டியின் திடீர்க் கேள்வி கிழவியை ஒரு உலுக்கு உலுக்கியது. கிழவி சுதாரித்தாள். "இருக்கிற ரெண்டு வயக்காட்டையும் உங்க அப்பன் ஒத்தி வச்சுட்டான். அதத் திருப்பத் துப்பில்லாம ஒன் அக்காக்காரிக ரெண்டு பேரையும் திருப்பூருக்கு அனுப்பிச்சுருக்கான். ஒன்னையும் அங்கதான் அனுப்பப் போறானாம். அந்தக் குடிகாரப்பய பேச்ச தட்டமுடியாம இருக்கா ஒன் அம்மாக்காரி. ஒங்க அப்பனுக்குச் சம்பாதிக்கத் துப்பில்லையின்னாலும் பேச்சுல குறயில்ல. யார் சொன்னாலும் ஏறாது. நான் சொன்னாக் கேக்கவா போறான்" புலம்பல் தொடர்ந்து கொண்டிருந்தது. மூக்கைச் சிந்தி புடவையில் துடைத்துக் கொண்டாள். பாண்டிக்கு 'ஏன்டா கேட்டம்' என்றாகிவிட்டது.

வேலை முடிந்து பாண்டியின் வேன் திருச்சுழியைக் கடக்கும் போது மணி ஐந்தரைக்கு மேல் இருக்கும். ஸ்பெசல் கிளாஸ் முடிந்து வீடு திரும்பும் சிறுமிகளை தினமும் பார்ப்பாள். களைத்துப் போன அந்த நேரத்திலும் மலர்ச்சியான அந்த முகங்களைப் பார்க்கும்போது பாண்டிக்கு ஏக்கமாயிருக்கும். நாளுக்கு நாள் அவளுக்கு பள்ளி செல்வதற்கான விருப்பம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் முடியுமா என்று தெரியவில்லை. அப்பாவிடம் நேரில் கேட்க பயம். தினமும் அம்மாவிற்கு விழும் அடி, உதைகளைப் பார்த்திருக்கிறாள். அந்த நேரம் அப்பாவைப் பார்த்தால், ராட்சசன் போல் இருக்கும். பாண்டி போர்வைக்குள் புகுந்து கொள்வாள்.

என்னவென்று தெரியவில்லை. காலையிலிருந்தே பாண்டியின் மனதிற்குள் ஏதோ ஒன்று குறுகுறுத்துக் கொண்டிருந்தது. நல்லதா, கெட்டதா தெரியவில்லை.

மாலை மணி ஐந்தரை. திருச்சுழி பஸ் ஸ்டாண்ட். வழக்கமான பஸ் 'ப்ரேக் டவுன்' ஆகிவிட்டதால் கோமதி டீச்சர் அந்நேரம் நின்றிருந்தாள். பாண்டியின் வேன் கடந்து சென்றது. பாண்டி டீச்சரைப் பார்த்துவிட்டாள். நிறுத்துங்கள் என்று பாண்டி கத்துவதற்குள் வேன் நின்றது. டிரைவருக்குத் தெரிந்தவர் ஒருவர் வேனை நிறுத்தி, பேசிக்கொண்டிருந்தார். பேச்சு மட்டும் டிரைவருடன். பார்வையெல்லாம் வேனுக்குள்.



படிப்பகம்

www.padippakam.com

பாண்டி வேன் கதவின் கைப்பிடியைத் திருகினாள். "ஏய்.. புள்ள எறங்காத. வேன் கிளப்பப் போகுது" கிளீனர் கத்திக் கொண்டிருந்தான்.

பாண்டி வேனை விட்டு இறங்கினாள். நேரே ஓடினாள். குறுக்கே வந்த வாகனங்களை விலக்கி டீச்சரை நோக்கி விரைந்தாள். டீச்சரும் பாண்டியைப் பார்த்து விட்டார். இரண்டடி முன்னால் வைத்தார். ஓடிவந்த பாண்டி டீச்சரைக் கட்டிக்கொண்டாள். "என்ன பாண்டி" என்று டீச்சர் கேட்பதற்குள் அழ ஆரம்பித்துவிட்டாள். டீச்சருக்கு ஒரு நிமிடம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. பாண்டி அழுவதற்கான காரணம் அவளுக்குத் தெரிந்ததால் அவள் அழட்டும் என்று விட்டுவிட்டார். அழுது முடியட்டும் என்று காத்திருந்தார்.

இதற்குள் வேனிலிருந்து வந்த கிளீனரும் கையைப் பிசைந்துகொண்டு பக்கத்திலேயே நின்றிருந்தான். வேனிலிருந்து டிரைவர் திரும்பிப் பார்த்தான். இரண்டு முறை 'ஹார்ன்' அடித்தான். பின்னர், அழுது கொண்டிருந்த பாண்டியின் முகத்தையும், அழுகையை அடக்கிய டீச்சரின் முகத்தையும் பார்த்தவன், இன்ஜினை ஆஃப் செய்துவிட்டு கீழே இறங்கி நின்றுகொண்டான்.

பஸ்ஸுக்காகக் காத்திருந்தவர்கள், கடைக்காரர்கள், கடைத்தெருவிற்கு வந்திருந்த உள்ளூர்வாசிகள், டீச்சருக்கும் மாணவிக்கும் இடையிலான இந்த உறவைக் கண்டு சிலிர்த்துப் போனார்கள். பாண்டி அவளாகவே அழுகையை நிறுத்தினாள். டீச்சர் அவள் தலையைக் கோதி விட்டார். பாண்டி தேமலுடன் "எங்க அப்பாக்கிட்ட என்னையப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பச் சொல்லிக் கேளுங்க டீச்சர். என்னய எங்க அக்காவ மாதிரி திருப்பூருக்கு அனுப்பப் போறாங்களாம்" என்றாள். கோமதி டீச்சர் "கட்டாயம் பேசுறேம்மா, டீச்சருக்கு நிறைய வேலையிருக்குறதால அடுத்த வாரம் வந்து உங்க அப்பாவப் பாக்குறேன். நீ கௌப்பு எல்லாரும் காத்துக்கிட்டு இருக்காங்க பாரு... கிளம்பு" என்றார். "மறந்திராமக் கேளுங்க டீச்சர். நீங்க சொன்னா எங்க அப்பா கேப்பாரு" என்ற பாண்டியிடம் டீச்சர் "சரிம்மா" என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

கையசைத்து பாண்டி 'டாட்டா' காட்ட வேன் கிளம்பியது. டீச்சரின் கண்கள் கலங்கியது 'நான் பேசியும் கேட்காத இவள் அப்பனைப் பற்றி இந்தக் குழந்தையிடம் கூற வேண்டாம். ஏற்கனவே பிடிக்காத அப்பன் மேல் கோபம் கூடும். நான் ஏமாற்றியதாகவாவது நினைக்கட்டும். நம்பிக்கை இல்லை என்றாலும்கூட மறுபடியும் இவள் அப்பனிடம் பேசிப் பார்க்கலாம்'

விசிலடிக்கும் சத்தம் கேட்டது. கோமதி டீச்சர் போக வேண்டிய பஸ் ரெடியாகி விட்டது. பாதியில் நின்ற பாண்டியின் பயணமும் தொடரவேண்டும் - அதற்கு என்ன செய்யலாம் - எப்படி அவள் அப்பனிடம் பேசலாம் என்ற சிந்தனைகளுடன் டீச்சரின் வீடு நோக்கிய பயணம் தொடர்ந்தது.

## கபீரியலின் பாடல்

ஓ...
எனது சப்பாத்துக்கள்
ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவை.

நீங்கள் தயவு செய்தால்-
எனது காற்சட்டை
பிரித்தானிய நாட்டைச் சார்ந்தது என்பேன்.

எனது தலைக்கு மேலே சிவப்புத் தொப்பி
அது ரஷ்ய நாட்டவரது.
இவை எல்லாவற்றுக்குமாக
என்னிடம் இருப்பது
ஓர் இந்திய இதயம்...

*-சல்மான் ருஷ்டி-*
*சாத்தானின் பாடல்கள்*
*சுவடுகள் -நார்வே*
*தமிழாக்கம் - க. ஆதவன்*



படிப்பகம்

www.padippakam.com

# நட்பு

உதரினாலும் உதிராமல்
ஆடையில் ஒட்டிய ஒட்டுப்புல்லாய்....

இலையுதிர் காலத்திலும்
கிளையின் தங்கிய இலையாய்...

குளம் வற்றினலும்
அடுத்த மாரிக்காலத்தில்
மறுபிறவிக்கு தயாராய் இருக்கும்
மீன் முட்டைகளாய்...

இரவில் விழிக்க
பகலில்
பாசாங்கு செய்யும்
விண்மீனாய்...

அவன் வெறுத்தாலும் மறுத்தாலும்
நட்பு-அட்டையாய்
நெஞ்சில் ஒட்டி உயிரை உறிஞ்சுகிறது.

-பாரதி குமார்

உலகப் பிரச்சனையின் ஒரு பகுதியாக
உங்களை நீங்கள் மாற்றிக் கொண்டு
விடாதீர்கள். உலகப் பிரச்சனையைத் தீர்க்க
பாடுபட்டு வரும் மனித சக்தியின் ஒரு
பகுதியாக நீங்கள் இருக்க வேண்டும்.

-ராபர்ட் இங்கர்சால்



படிப்பகம்

www.padippakam.com

# நேர் காணலில்

கேள்வி : தமிழ் நாட்டில் கோத்ரா சம்பவம் நடந்தால்?
பதில் : குஜராத்தில் எப்படி இந்துக்கள் தியாகம் செய்தார்களோ அது போலவே தமிழ்நாட்டிலும் செய்வார்கள்.



திடப்படப் பார்க்கிறது
கணவாய்களின் வழி
உள் நுழைந்த
மேய்ச்சல் கனவுகள்.

இனத்தூய்மை பேண
இஸ்லாமிய ரத்தம் பூசி
விடைப்பெறுகிறது
முப்புரி.

கையில்
மூத்திரப் பையுடன்
சர்க்கர நாற்காலியில்
சாகும்வரை
சமர் செய்த
சிந்தனையாளன் மண்ணில்...

வாரீசுகளின்(?)
வழி மொழிதலில்
கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன
தியாகங்கள்

கேள்வி : இத்தகைய வன்முறைகளைப் பார்த்து எப்படி பெருமைப்படுகிறீர்கள்?
பதில் : நீங்கள் இந்துத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கிருஷ்ண பகவான் கம்சனைக் கொன்றார். வாலி, ராவணன், ராட்சதர்களை ராமர் கொன்றார். அதே தர்மத்தைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்.

புதிய
புரிதல் வகுப்புகளில்
வரலாற்றுத் தர்மம்
ஏகலைவன்களும்
சம்புகன்களும்

www.padippakam.com

# ழியர் கவிதை

சமணர்களும்
சிறுபாண்மையினர்களும்
மட்டுமல்ல...
நிர்ணயிக்கப்படும் இலக்குகளில்
சிவப்பு சிந்தனையர்களும்.

—

**கேள்வி** : வி.இ.ப.வின் பலத்தால் பா.ஜ.க.வுக்கு தேர்தல் ரீதியாக பலன் கிடைக்கிறதா?

**பதில்** : இன்னும் ஐந்தாண்டுகளில் மதத் தலைவர்கள் சொல்வதைத்தான் மக்கள் கேட்கப் போகிறார்கள். எங்களைப் போன்ற மக்களைத் திரட்டுபவர்கள்தாம் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வோம். அப்படி ஒரு காலம் வருகிற போது நாங்கள் இந்திய அரசியல் சட்டத்தையே மாற்றுவோம்.

தானே ஆடத்
தருணம் பார்த்துவிட்டன
தலைகள்.
வால்களின்
தயவுகள் போதுமென.

மாற்றிடும்
முனைப்பில்
முழக்கப்படுகிறது
பாஞ்சசன்யம்
மீண்டுமொரு
நவ பாரத யுத்தம்

இனி
நம் அரிவாள்கள்
கூர்மைப்படட்டும்.
வால்களை வெட்ட
தலையைத் தரிக்க.




—

பேட்டி. : விஸ்வ இந்து பரிஷத்தின் சர்வதேச(?) பொதுச் செயலாளரான பிரவீண் டொகாடியா திருச்சி மாநாட்டின்போது அளித்தது (இந்தியா டுடே. பிப்-26-2003)

# பார்வதி பரமசிவன் உரையாடல்


பார்வதி : எனது பிராண நாதனாகிய ஓ, சிவ பெருமானே! ஆகாயத்தில் பறக்கிற கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்துப் பலர் காலையிலும், மாலையிலும் கன்னங் கன்னமாய்ப் போட்டுக் கொள்கின்றார்களே, அது எதற்காக, நாதா?



பரமசிவன் : கண்மணி! இது உனக்குத் தெரியாதா! கருடன் நமது அடிமையாகிய மாகவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால், விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்தில் அடித்துக் கொள்கிறார்கள்.

பார்வதி : ஓஹோ, அப்படியா சங்கதி! சரி; அப்படியானால் நமது அடிமையின் வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும் போது- நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்தில் அடித்துக் கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள்; ஓட ஓட அடிக்கிறார்கள்; செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள்; அடித்துக்கூட தின்றுவிடுகிறார்களே, அது ஏன்?

பரமசிவன் : நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை! நன்றாகச் சாம்பலைப் பூசிக் கொள்ளத்தான் தெரியும்; நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.



பார்வதி : அதுதான் போகட்டும்; நமது குமாரனின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னம் கன்னமாய் அடித்துக் கொள்ளாமல் தடியை எடுத்து அடித்துக் கொன்றுவிடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன் : கணபதி பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால், கணபதிக்கு அபிஷேகம் செய்யும் போதும் அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றிக் கொழுக்கட்டையை வைப்பார்கள். ஆனால், உயிருடன் காணும் போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக் கேட்டை யாருடன் சொல்லுவது?




பார்வதி : அதுதான் போகட்டும்; தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும்-சோடு! சோடு! என்று விரட்டுகின்றார்களே, அது என்ன காரணம் நாதா?

பரமசிவன் : கண்மணி! அதுவும் பக்தர்களின் அறியாத்தனந்தான். ஆனாலும், அது மலம் சாப்பிடுகிறதல்லவா? அதனால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள்போல் இருக்கின்றது.

பார்வதி : என்ன நாதா, வைனவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால், மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துகளையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்தப் பக்தர்கள் மன்னிக்கும்போது, மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக் கூடாது? அதுதான் போகட்டும்; நமது குமாரன்



வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்வதில்லை? அன்றியும், ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்றுவிடுகிறார்களே? அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்? இது என்ன அநியாயம்!



பரமசிவம் : அது அந்த பக்தர்களின் பக்திக் குறைவு; அதற்கு நாம் என்ன செய்யலாம்?

பார்வதி : நாதா! சரி, சரி; இதையெல்லாம் பார்க்கும்போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கவுரவமும், அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும்; நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பது எனக்கு வெளியில் தலைநீட்ட முடியவில்லையே! தவிர, விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலட்சுமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப்பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர, நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல்-விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங் கன்னமாய்ப் போட்டுக் கொண்டு மரியாதை செய்கிறார்களே, இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்!

பரமசிவம் : என்ன செய்யலாம், சதி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப்படும்படியாக விதித்துவிட்டான். விதி யாரை விட்டது, சொல் பார்ப்போம்! என் கண்மணி! நீ இதற்காக அழ வேண்டாம்; உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

பார்வதி : சரி, சரி; இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும்! இனி நீங்கள் வேறா அழ வேண்டும்! போனால் போகட்டும்; இம் மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவைப் பேசிக்கொள்ளலாம். வாருங்கள்-நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்!

**('சித்திரபுத்திரன்' எனும் பெயரில் பெரியார் - 'குடி அரசு' 17-06-1928)**

www.padippakam.com

# பசியும் எரியும்

**- மதி**

கவிதைத் தொகுப்பென எதை வாசித்தாலும், அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும், எவ்வளவு பெரிய ஆள்(?) எழுதியதாக இருந்தாலும், அதில் ஏதாவது சில கவிதைகள் நம்மை ஈர்க்கின்றன. லயிக்க வைக்கின்றன. நம் உணர்வுகளோடு ஒத்துப் போகின்றன. சில விஷயங்களை உரிமையோடு பகிர்ந்து கொள்கின்றன. உணர்வூட்டுகின்றன. மற்றவை இலவச இணைப்பாய் வாசிப்பின் மறுநொடியில் மனதை விட்டு வெகுதூரம் விலகி... விலகி...

தீபனின் பசியும் எரியும் என்ற சிறு தொகுப்பில் (32பக்கம் மட்டும்) பல கவிதைகள் நம்மைப் பாதிக்கின்றன. பரவசப்படுத்துகின்றன. நம் உணர்வுகள் தீபனின் வரிகளில் வெளிப்படுகின்றன.

"கவிஞனின் வேலை கவிதை எழுதுவது மட்டுமன்று; சமூக மாற்றத்திற்காகப் போராடுவதும்தான்" என்ற மேற்கோளை முன்முழக்கமாகக் கொண்ட தொகுப்பு-போராட்டத்திற்கான களங்களை, தொகுப்பினுள் அடையாளங் காட்டுகிறது. இயங்கத் தூண்டுகிறது.

'தூண்டுதல் வேண்டும்
எதற்கும்.
பசியின் தூண்டுதலில்
இயங்குகிறது உலகம்
மனசின் தூண்டுதலில்
வளர்கிறது வாழ்க்கை.
பிறரைத் தூண்டுவதலும்
நிகழ்ந்தே விடுகிறது'

இப்படிப் போகும் "தூண்டல்" கவிதையில் "நம்மீதான தூண்டல் பிறரைத் தூண்டுவதையும் நிகழ்த்தி விடுகிறது" என்பதே உண்மை. தொகுப்பில் குறிப்பிட்டுச் சொல்ல நிறைய இடங்கள். அவற்றில் சில மட்டும் இங்கே - சிறு அறிமுகமாக...



படிப்பகம்

www.padippakam.com

'இறப்பில் கூட
நாய்கள் ஒருபடி மேல்தான்.
வேட்டையாடப்படுதலும்
வெளிப்படையாகவே
நேர்கிறது அதற்கு'
(வேட்டை)

'எயிட்ஸ் விழிப்புணர்வு
கருத்தரங்கம் போட்டார்கள்.
ஆணுறைக்குப்
பரவலான விளம்பரம்.
விபச்சாரத்துக்கும்...'

'அதுல பாருங்க!
"கம்ப்யூட்டர்" படிச்சா
அமெரிக்கா கூட போகலாமாம்!
ம்!
படித்த அடிமைகளாய்'
(முணுமுணுப்புகள்)

'மண்குடிசை
மண்பானை சோறு
மணல்வீடு கட்டிய வாழ்க்கை
மழைகிளப்பும் மண்வாசனை
மண்ணைக் கிளரும் உழவு
என்றிருந்த
மண்ணின் உறவுகள்
அறுந்தே போனது.

அனல் வீசும் தார்ச்சாலை



படிப்பகம்

www.padippakam.com

வீட்டு மனைகளாய்
கூறாகும் நிலங்கள்

அயல் நாட்டின் கழிவுகளாய்
வேறுக்கும் ஆலைகள்

எதையும் சகித்தே பழகியவர்கள் நாம்
மனிதம் உயிர்க்கும் மண்
நாளை
சிறிய பொட்டலங்களில்
விற்பனைக்கு வரலாம்...
தண்ணீரைப் போல்...
அதையும்.

(மண்)

வேண்டாம் போதும். விட்டால் தொகுப்பில் தொண்ணூறு விழுக்காடு மறு பதிப்பாகிவிடும். மொத்தத்தில் முதல்வாசிப்பில் தூக்கம் கெடுத்த தொகுப்பு. மறுவாசிப்பில் துணைக்கொரு தோழமை உண்டென நிம்மதியாய் தூங்கவைத்த தொகுப்பு.

நூல் : பசியும் எரியும்
ஆசிரியர் : தீபன்
முகவரி : 112, பூபதி நகர்
ஆற்காடு - 632 503
வேலூர் மாவட்டம்
விலை : ரூ 7/-

முன்னேறும் சந்தர்ப்பங்கள் தானாக வருவதில்லை : அவைகள் உருவாக்கப்படுகின்றன.

-ஓரியன் ஸ்வட் மார்டென்



படிப்பகம்

www.padippakam.com

# என் கருப்பு வைரமே...

சு.சமுத்திரம் என்ற இலக்கியவாதி, சிறுகதை எழுத்தாளர், தோழர் மற்றும் ஆலோசகருடன் இரண்டு ஆண்டுகள் நெருங்கிப் பழகியதன் அடிப்படையே இந்த வெளிப்பாடு. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட எய்ட்ஸ்-தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டத்தின் (அபெக்) மண்டல அளவிலான மரபுவழி கலைகளுக்கான பயிற்சி மற்றும் கருவூல மையத்திற்காக நானும் விண்ணப்பித்திருந்தேன். மையத்தை தேர்வு செய்ய மூவர் கொண்ட குழு என் அலுவலகத்தைப் (பத்துக்குப் பத்தில் சிறிய அறை - ஆனால், பெயர் மட்டும் அலுவலகம்) பார்வையிட (விசிட்) வந்திருந்தது. அந்தக் குழுவில் ஒருவர் சு.சமுத்திரம். திட்டத்தில் என் அலுவலகமும் தேர்வு செய்யப்பட்டது. திட்டம் கிடைத்தது. செயல்பாடுகள் தொடங்கி சில மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் சு.சமுத்திரம் என்னிடம் கூறினார், 'தம்பி உண்மையைச் சொன்னால் உன் அலுவலகத்தின் நிலையைப் பார்த்துவிட்டு உனக்கு இந்த ப்ராஜக்டைக் கொடுக்கக் கூடாது என்று உறுதியாகச் சொன்னேன். ஆனால், மற்ற இருவரும் உன் மேல் நம்பிக்கை வைக்கச் சொன்னார்கள். வேண்டா வெறுப்பாகச் சரி சொன்னேன். சாதித்து விட்டாய். நாங்கள் பெரிய நிறுவனங்கள் என்று ஏ.சி. அலுவலகத்தைப் பார்த்து தேர்வு செய்ததெல்லாம் செயல்படவில்லை. எதையும் செயல்படுத்த - ஈடுபாடும், அர்ப்பணிப்பும் சமூக அக்கறையுமே' என்று சொல்லி அவர் எழுதிய சில புத்தகங்களில் சிலவற்றில் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

பத்து நாட்கள் வீதி நாடகம் மற்றும் கிராமிய கலைகளுக்கான பயிற்சிக்கான பயிற்சி நடத்தும்போது 3 நாட்கள் முழுவதும் உடன் இருப்பார். ஆலோசகர் என்ற முறையில் பயிற்சிக்கு உறுதுணையாக அவரது வானொலி, தொலைக்காட்சி, இலக்கிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார். ஏன் அவர் நடித்துக்கூட காட்டியிருக்கிறார். எளிமையான, யதார்த்தமான மொழி நடையில் சொல்லிக் கொடுப்பார். நிறைய பழமொழிகளையும், உதாரணங்களையும் சேர்க்கச் சொல்லுவார்.



படிப்பகம்

www.padippakam.com

சு.சமுத்திரம் அவர்கள் நேர்மையான, தன்னலமறுப்பு இலக்கியவாதி. இளமைப்பருவத்திலேயே (15ஆம் வயதில்) சொந்த ஊரில் கூட்டுறவு சங்க ஊழல்களைப்பற்றி கூட்டம் போட்டுப் பேசிக் கண்டித்ததையும், 33 ஆண்டு காலம் மத்திய அரசில் பணிபுரிந்தாலும் அரசுக்கெதிராக 3 முறை நீதிமன்றங்களுக்கு சென்றிருந்ததையும், தான் பனைஏறி நாடார் சாதியைச் சார்ந்திருந்தாலும், நாடார் சங்கம் போன்ற சாதிய அமைப்புகளில் பங்கு பெற அவர் மனம் என்றும் ஒத்துக்கொண்டதில்ல என்பதையும், எழுத்தாளனாக்கிய ஆனந்த விகடனையும், எம்.ஜி.ஆர். கைப்பட 1982-இல் அவரின் இரண்டு சிறுகதைகளுக்குத் தமிழக அரசின் விருதுகள் கொடுத்ததையும், "சாகித்ய அகாடமி" பரிசு கிடைத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியையும், பரவசத்துடன் அடிக்கடி நினைவு கூர்வார். தமிழ்ச்சாதி தவிர வேறு சாதியில்லை என்று சொல்லும் அவரின் குரல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது. இப்படி எத்தனையோ நினைவலைகள். இருந்தாலும், இறப்பதற்கு முன்பு கடந்த பிப்ரவரி 24-ஆம் நாள் முதல் மார்ச் 7-ஆம் நாள் வரை விழுப்புரத்தில் நடைபெற்ற வீதி நாடக பயிற்சியாளர் பயிற்சியில் கடைசி 3 நாட்கள் எங்களோடு இருந்தார். பெரிய காலனி என்ற குடிசைப் பகுதியில் வீதிநாடக நிகழ்வின் போது மக்களிடையே பழகியது, பேசியது, அவர்களுடனே 2-மணி நேரம் இருந்தது. சாதி மறுப்பாளர்களும், பெரியார் சிந்தனையாளர்களும், தோழர்களும் அவரைச் சுற்றி இருந்த அந்த நினைவோடு அந்த மாமனிதருக்கு விடைகொடுத்துவிட்டு வந்தேன். சில நாட்களுக்கு முன்பு பேரிடியாக அவரின் மரணச் செய்தி - நம்பமுடியவில்லை. கனத்த இதயத்தோடு சென்னை சென்று அந்த மனிதருக்கு மலரஞ்சலி செலுத்தி அழுதேன். நெஞ்சிருக்கும் வரை என் கறுப்பு வைரம் அய்யா அவர்களின் நினைவிருக்கும்.

என்றென்றும் தோழமையுடன்,

**ச.அய்யங்காளை**

(திட்ட இயக்குநர்)

எம்.ஏ.எஸ்.டபுள்யூ.



படிப்பகம்

www.padippakam.com

# அத்தி பூத்தது போல்... ... ...

— மதி கண்ணன்

குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதுவது, அப்பாடல்களை குழந்தைகள் பாடுவது என்ற முயற்சியில் வெற்றியும் பெற்றவர் முதலில் பாரதியார். தொடர்ந்து குழந்தைகளை மையப்படுத்தியும், குழந்தைகளின் வாசிப்பை மையப்படுத்தியும் படைப்பாளியாக பரிணமித்தவர் அழ.வள்ளியப்பா. வாண்டு மாமா, அம்புலி, ரேவதி போன்றோர் குழந்தைகளுக்கான கதைகளை நிறைய எழுதி உள்ளனர். அருப்புக்கோட்டை பகுதியில் குழந்தைகளுக்காக இலக்கியம் படைப்பவர் 'குழந்தை இலக்கிய மணி' பட்டம் பெற்ற பாவலர் பொன்ராசன். அவரின் குழந்தை இலக்கிய வழித்தோன்றல் அருப்புக்கோட்டை செல்வம்.

| | |
|---|---|
| நூல் | : இளந்தளிர்களுக்கான இனிய பாடல்கள் |
| ஆசிரியர் | : அருப்புக்கோட்டை செல்வம் |
| வெளியீடு | : கற்பகம் புத்தகாலயம்<br>50-18, ராஜா பாதர் தெரு<br>பாண்டிபஜார்<br>தியாகராய நகர்<br>சென்னை - 600 017 |
| விலை | : ரூ20/- (மிகவும் குறைவே) |

குழந்தைகளுக்கென நிறைய சிறுகதைகள், நாடகங்கள் மற்றும் கட்டுரைகளும்கூட எழுதியுள்ளார். முந்தைய நாட்களில் குழந்தைகளுக்கான விதம் விதமான படைப்புகள் எனப்பார்த்தால், சீன, கிரேக்க, ரஷ்ய இலக்கியங்களில், அவை ஒப்பீட்டளவில் அதிகம். அதிலும் குறிப்பாக ரஷ்யாவில் நாட்டில் நடந்த போராட்டம், புரட்சி, அரசியல் மாற்றம் இவற்றை உள்ளடக்கிய குழந்தைகளுக்கான நாவல்களும் உண்டு. இளம் உளவாளியை மையப்படுத்தி நகரும் சிறாருக்கான நாவல் 'இவான்' மற்றும் அன்பின் ஆழம் தேடும் குழந்தையை மையமாகக் கொண்ட 'ஸெர்யோஷா' போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கன. அருப்புக்கோட்டை செல்வமும்



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளுக்கான நாவல் ஒன்று எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அருப்புக்கோட்டை செல்வம் தம்/நம் குழந்தைகளுக்காக எழுதிய பாடல்களின் தொகுப்பு 'இளந்தளிர்களுக்கான இனிய பாடல்கள்'

இத்தொகுப்பில் 75 பாடல்கள் உள்ளன. குழந்தைகளுக்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள வழக்கமாக மந்தமான இசைச் சந்தத்திலிருந்து மாறுபட்ட இசைக்கட்டுடைய பாடல்களும் உண்டு. கோவிலுக்குச் செல்வதில் இருந்து, பள்ளிக்குச் செல்வது, விளையாட்டு வழியாக உண்மை இன்பம் வரை உள்ள பாடல்களில் மிருகங்கள், பறவைகள், பொருட்கள் பற்றிய பாடல்களும் உண்டு.

பாடுபொருட்கள் எனப்பலவற்றை எடுத்துக் கொண்டாலும் இன்றுள்ள சாதி, மத, பேதச்சூழலில்

**'ஒரே மனிதன் தனியனாக**
**வாழமுடியுமா? இந்த**
**உண்மையினை உணர்ந்து கொண்டால்**
**பேதம் வளருமா?'** என்று நியாயமான கேள்வி கேட்கும் பாடல்களும்,

'நல்லொழுக்கம் என்னும் சோப்பை
நாமும் போட்டாலே - நம்மில்
தீயொழுக்கம் என்னும் அழுக்கு
தீய்ந்து போகுமே' என்றும்
'நல்ல தண்ணீர் போல நாமும்
இருக்கப் பழகணும் - நமது
நண்பர்களை நாமும் அதுபோல்
மாற்ற முயலணும்' என்றும்
'நாலு பேர்கள் கூடும்போது
நன்மை செய்யணும்
நாலு காலு மிருகம்கூட
நம்மை வணங்கணும்' என்று நிறைய நல்ல நல்ல விஷயங்களை பக்குவமாய் குழந்தைகளுக்குச் சொல்லித்தரும்



படிப்பகம்

www.padippakam.com

பாடல்களின் தொகுப்பு. பல பாடல்களில் இறை நம்பிக்கை புகுத்தப் பட்டிருப்பதையும், ஓரிடத்தில் சாதிப் பெயர் பயன் படுத்தப்பட்டிருப்பதையும் தவிர்த்திருக்கலாம். கோயில், கடவுள் தொடர்பான சரிபார்க்க வாய்ப்பற்ற, அறிவியலுக்குப் புறம்பான சிறு குழந்தைகளுக்குத் தேவை இல்லாத விஷயங்களை சொல்லித்தர ('அம்மா' முதல் அரசியல் கட்சிகள்வரை) நிறையப் பேர் இருக்கும்போது நாமும் அதைச் செய்ய வேண்டியது இல்லை. ஆனால், நல்ல/ அறிவியல் பூர்வமான/ தேவையான விஷயங்களை தான் அறிந்தவரை அம்மாவும், முடிந்தவரை ஆசிரியரும் மட்டுமே கற்றுத் தருவர். அத்தி பூத்தாற்போல் வரும் குழந்தைகளுக்கான படைப்புகளின் வழியாக அவற்றை சொல்லித்தர யார் இருக்கிறார்கள் நம்மைத் தவிர.

**படைப்புகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் என 'நினைத்தபோது வெளிவரும்' எண்வழி இதழ்**

## காற்று வெளி

ஆசிரியர் : ஷோபா

முகவரி : காற்றுவெளி
34 RED REFFE ROAD
PLAISTOW
LONDON 13 0JK
UNITED KINGDOM

*மீண்டும் ஒரு*
*சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது.*

*நாட்டிலும் சமாதானச் சூழல்*

*எனினும்,*
*உலகை*
*அழுத்தும் ஏகாதிபத்திய*
*அச்சுறுத்தல்கள்.*

*இத்தனைக்கும் மத்தியில்*
*காற்றுவெளி வருகிறது.*

*அரசியல் வேண்டாம்*
*காற்று வெளிக்கு.*

*நல்லதாய்*
*தடம் பதிப்போம்.*

*அது*
*போதும் இப்போதைக்கு.*

*வணக்கத்துடன்*
*ஷோபா*

(காற்று வெளியின் ஆசிரியர் கடிதம்)



படிப்பகம்

www.padippakam.com

# கழகப் பண்பாடும் பண்பாட்டின் கழகமும்

(தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகத்தின் திருச்சி மாவட்ட மாதாந்திரக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் அடிப்படையிலானது)

**சி.மதிவாணன்**

'நான் இந்து அல்ல நீங்கள்' என்ற வெளியீட்டை அடுத்து யாதுமாகி பதிப்பகம் 'இதுதான் பார்ப்பனியம்' என்ற வெளியீட்டைக் கொண்டு வந்துள்ளது. சிவக்குமரன் எழுதியுள்ள இப்பிரசுரம் படிக்கப்படுவதற்கும் விவாதிக்கப்படுவதற்குமான மற்றுமொரு வெளியீடு. காவிப் பயங்கரம் நாடளுமன்ற ஜனநாயக வரையறைக்குள் நின்று கொண்டு பாசிசத்தைக் கட்டிக் கொண்டுள்ள இச்சூழலில், அனைத்து வகைப்பட்ட திராவிடக் கழகங்களும் ஏதேனும் ஒரு வகையில் காவிக் கூட்டில் திளைத்துக் கொண்டிருக்கும் சூழலில், தமிழில் இதுபோன்ற புத்தகங்கள் வெளியிடப்படுவது வரவேற்புக்குரியது. மேற்கண்ட புத்தகத்தின் விமர்சனமாகவே என் உரையை முன் வைக்கிறேன்.

கடந்த வெளியீட்டைப் பற்றி 'ஆகா ஓகோ' என எழுதிய கலைஞர் இந்த வெளியீடு பற்றி இதுவரை ஏதும் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. கருணாநிதியின் வார்த்தைகளுக்கு மட்டுமல்ல மௌனத்திற்கும் பொருளுண்டு. கீழே கொடுக்கப்பட்டுள்ள மேற்கோளில் இரண்டாவது அம்சம், ஒருவேளை, அவரை மௌனமாக்கியிருக்கக் கூடும்.

"இப்போது நமக்குத் தெளிவாகப் புரிகிறது. பார்ப்பனியத்தை எதிர்த்துப் போரிட விரும்பும் எவரும்,

1. பார்ப்பனியத்தின் பாதுகாவலர்களாக இருக்கும் பார்ப்பனர்களை எதிர்க்க வேண்டும்.

2. சுயநலக் காரணங்களுக்காகத் தெரிந்தே பார்ப்பனர்களுக்குத் துணைபோகும் பார்பனரல்லாதவர்களை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்.

3. அறியாமையால் பார்ப்பனர்களுக்குத் துணை போகின்றவர்களை விமர்சன ரீதியில் தெளிவுபடுத்தி



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனியத்திற்கு எதிராகத் திரட்ட வேண்டும்" (நூலின் 34-35ஆம் பக்கங்கள்)

நிச்சயம் பார்ப்பனியக் கருத்தியலின் அடிப்படையில் இயங்கும் பிஜேபியின் பங்காளியான கருணாநிதி இந்த நூலை ஆதரித்துக் குரல் கொடுக்க மாட்டார்தான். அப்படி ஒரு வேளை அவர் ஆதரிப்பார் என்றால் இந்த நூலாசிரியர் என்ன நிலைப்பாடு எடுப்பார் என்பதைப் பார்க்க சுவாரசியமாக இருக்கும்.

பார்ப்பனியம் நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் ஆளும் கருத்தியல் என்பதையும், அது காலங்காலமாய் ஆட்சியதிகாரத்தில் இருந்து வருவதைச் சாதிக்க, விடாது பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டு வருவது எவ்வாறு என்பதையும் வரலாற்று ஓட்டத்தினை எடுத்தியம்பி, நூல் புரிய வைக்கிறது. வரலாற்றுப் போக்கினைப் பற்றிய விரிந்த ஒரு முன் வைப்பை இலக்காக இந்நூல் கொள்ளவில்லை என்பதால் அது பற்றி இப்போது பேசப்போவதில்லை.

மிகவும் உரிய நேரத்தில் மிகவும் அடிப்படையான விஷயங்களைத் தொகுத்து எழுதப்பட்ட நூல் சில முக்கியமான அம்சங்களில் மௌனம் சாதிப்பதை மட்டுமே இங்கே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள விரும்புகிறோம்.

நிலப்பிரபுத்துவ ஆட்சியதிகாரத்தை நியாயப்படுத்துவதற்கான கருத்தியலாக பார்ப்பனியம் முகிழ்ந்தது என்பதை நிலைநாட்டும் ஆசிரியர், இன்று அது மீண்டெழுவதற்கான சமூக அடித்தளம் என்ன என்பதைப் பற்றிய கருத்துரைக்குச் செல்லவில்லை.

பார்ப்பனியத்திற்கு எதிரான திராவிட இயக்கத்தின் போராட்டத்தை பெரியார் வரையிலும் மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடன் வியந்து எழுதும் ஆசிரியர் (திராவிட, முன்னேற்ற, அண்ணா, மறுமலர்ச்சி) கழகங்களின் பாத்திரம் என்ன என்பது பற்றி வியக்கத்தக்க வகையில் மௌனம் சாதிக்கிறார்.

நிலவிவந்த அல்லது வருகின்ற பல்வேறு மதப் போக்குகள் (சைவம், வைணவம், சிறுதெய்வ வழிபாடு) பார்ப்பனியத்திற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் அல்லது எதிரான போராட்டங்கள் பற்றி பளிச்சிடும் வகையில் ஆங்காங்கே குறிப்பிடும் ஆசிரியர், இந்த மதப்



படிப்பகம்

www.padippakam.com

போக்குகள் அல்லது பிரிவுகள் பிராமணியத்திற்கு எதிராகப் போராடும் ஆற்றலைக் கொண்டுள்ளன என்று மயங்குகிறாரா என்ற குழப்பம் ஏற்படுகிறது.

இந்த மூன்று விஷயங்கள் பற்றின சிந்தனைச் சிதறலே இந்த விமர்சனமாக அமைகிறது.

இன்றைக்கு நிலப்பிரபுத்துவம் முந்தைய நிலைமை போல் செல்வாக்காக இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அப்படியானால், பார்ப்பனியமும் செல்வாக்கிழந்த அரசியல் கட்டமைப்பின் சித்தாந்தமாக வழக்கொழிந்திருக்க வேண்டும். ஆனால், இல்லை. வெட்ட வெட்ட தலை முளைக்கும் பாம்பு போல மீண்டும் எழுகிறது. எப்படி இது சாத்தியமாகிறது? வெறுமனே பிராமனச் சமூகத்தின் ராஜாஜி, சங்கராச்சாரி போன்ற சில நபர்கள் அல்லது தினமலர், தினமணி போன்ற சில பத்திரிகைகளின் கெட்ட எண்ணத்துடன் கூடிய சதிச் செயல் இன்றெதனை கோபத்துடன் அறிவித்து விட்டால் விஷயம் நிறைவடைந்து விடுகிறதா?

பார்பனியச் சிந்தனைப் போக்கு உலகளாவிய ஏகாதிபத்தியச் சக்திகளுடன் தன்னை இணைத்துக் கொள்வதில் விடாப்பிடியாக இருந்து வந்திருக்கிறது என்பதனை நூலாசிரியர் ஆங்காங்கே சுட்டிக்காட்டிச் செல்கிறார். அது ஏதோ ஒரு இனம் தன்னை தக்க வைத்துக் கொள்வதற்காக செய்த தந்திரமான, சகுனித்தனமான முயற்சி மட்டுமல்ல. மாறாக, இந்தியப் பிற்போக்கான நிலப்பிரபுத்துவம் ஏகாதிபத்தியப் பிற்போக்கு சக்திகளுடன் கைகுலுக்கிக் கொள்ள வேண்டிய வரலாற்று நிர்பந்தத்தின் வெளிப்பாடே அது. அடிமை இந்தியாவில் வெள்ளையர்களின் கைக்கூலியாக ஆர்எஸ்எஸ் இயங்கியதை நாம் மறந்துவிட முடியுமா? அதே இந்துத்துவ பிற்போக்குச் சிந்தனை, உலகமய நிலைககளில், பிற்போக்கு இந்திய ஆளும் கும்பலான பிற்போக்கு முதலாளித்துவம் மற்றும் குலாக்குகளின் தளர்வற்ற போராட்டத்தால் சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்ட பிராமணியம் இன்று அசுர பலத்துடனும், தேவ தந்திரத்துடனும் மீண்டெழுந்துள்ளது. இந்தச் சமூகப் பின்னணியைக் கவனிக்காது போனால் 'இதுதான் பார்ப்பனியம்' என்ற அடையாளப்படுத்தல் முழுமையடையாது.

பெரியார் கலகக்காரராகத் தன் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுகொண்டிருந்த அதே சமயத்தில் திமுக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி 'திராவிட ஆட்சி' மூலம் பார்ப்பனிய எதிர்ப்பு என்று படம் காட்டத் துவங்கி இன்று பார்ப்பனிய பிஜேபியின் மடியில் அமர்ந்து கொண்டு ஆட்சி செலுத்திக் கொண்டு வருகிறது. கருணாநிதியின் மூளையும் கரமுமாக விளங்கும் மாறன்தான் தொழில் அமைச்சரும்கூட(?). உலக வர்த்தக அமைப்புகளின் பிடிக்குள் இந்தியாவைத் தள்ளி விடுவதில் தொழில் மன்னனான மாறனின் பங்கு சற்றும் குறைந்தது அல்ல. (இங்கு அதே போல ஆந்திராவின் முதலமைச்சர், மன்னிக்கவும், CEO - வான சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட மாநிலத் தலைவர்கள் பலரையும் நாம் இங்கே குறிப்பிடலாம்.) கருணாநிதி கட்சியும், இன்றைய இதரக் கழகங்களும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் கைக்கூலிகள். எனவே, தவிர்க்க முடியாமல், சங்கர மடத்தை முன்னிறுத்தி ஆதிக்கச் சிந்தனையான மீண்டும் எழத்துடிக்கும் இந்து பிராமணியக் கருத்தியலுக்கு பல்லக்குத் தூக்குபவர்களாக மட்டுமே 'கழகக்காரர்கள்' இருக்க முடியும்.

பார்ப்பனியம் அடிப்படையில் ஜனநாயகத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரானது ஆகும். இன்று நிலவிக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் போலிமைகளை உதறிவிட்டு, தனது உண்மையான முகத்தைக் காட்ட வேண்டிய நெருக்கடி இருக்கிறது. மக்கள் விரோத பொடா சட்டத்தை எதிர்ப்பு மற்றும் பெரும்பான்மைக் குறைவுக்கிடையிலும் இயற்ற முடியும். அதே சமயம், பெண்கள் இட ஒதுக்கீட்டுக்கான மசோதாவை பெரும்பான்மை இருந்தும் நிறைவேற்ற முடியவில்லை! நாடாளுமன்ற ஜனநாயகக் கட்டமைப்பு மேலும் தனது சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது. இது போன்ற சூழலில் பழைமை மீட்டுப் பார்பனியம் மட்டுமே மக்களை மடையர்கள் ஆக்கும் வேலையை திறம்படச் செய்ய முடியும் என்பதால் பார்பனிய மீட்சி திட்டமிட்ட கவனத்துடன் நடந்து கொண்டிருக்கிறது.

கட்சிகளின் அமைப்புக் கட்டமைப்பும் கூட மாறியிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். உலகமயப் பொருளாதாரக் கொள்கையின்

www.padippakam.com

பங்காளிகளாக கட்சித் தலைவர்கள் மாறியிருக்கிறார்கள். தங்கள் சொந்த மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், கீழ் மட்டத் தலைவர்கள் வேறு வகையில் மக்கள் விரோதப் பொருளாதார நடவடிக்கைகளால் பலன் பெறுகின்றனர்.

சமூக, கலை, இலக்கிய
பல்சுவை இதழாக
மாதந்தோறும்
வாசகரை நோக்கி
**கண்ணியம்**
ஆசிரியர் :
முனைவர்.ஆ.கோ.குலோத்துங்கன்
முகவரி : அருள் அச்சகம்
30, கந்தசாமி சாலை
பெரியார் நகர்,
சென்னை - 600 082
ஆண்டு சந்தா : ரூ.60/-
ஐந்தாண்டு : ரூ 250/-

சமீபத்திய நிகழ்வுகள் சிலவற்றைப் பாருங்கள் : தா.கிருட்டிணன் கொலையில் குற்றவாளி யாராக இருந்த போதும், திமுக கட்சியமைப்பின் உண்மை நிலையை அதில் நிலவும் கோஷ்டிகள் சுட்டிக் காட்டுகின்றன. நிலவும் பொருளாதார சூழலில் முகிழ்ந்தெழும் சமூக விரோத புதுப்பணக்காரர்களின் கூட்டமே இங்கே நிலவும் கோஷ்டிகள். வெளிப்படையாக பார்க்கும் போது அரசியலும், அதன் உயிரோட்டமாக சமூக விரோத தொழில் நடவடிக்கைகளும் என்பதுவே இன்றைய கழகக் கொள்ளையர்களின் உண்மைத் தோற்றம். செஞ்சியாரின் கோடி ரூபாய் கொள்ளையையும் அழகிரியின் தொழில் கூட்டாளிகளாக அதிமுககாரர்கள் இருக்க முடிகிறது என்பதையும், சன் டீவியின் கேபிள் யுத்தத்தில் அதிமுக நடுநிலைமை எடுத்து உதவி செய்ததையும் கவனிக்கும் எவருக்கும் அரசியல் என்பது கொள்ளைக் கூட்டத்தாரின் ஒப்பந்தமாக இயங்குவதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே, இரட்டை முகம் கொண்ட பண்பாடு தவிர்க்க முடியாததாகி விடுகிறது. பார்ப்பனியம் போன்றதொரு இரட்டைத் தன்மை கொண்ட ஒரு கருத்தியல் மட்டுமே இப்போக்கினை நியாயப்படுத்த முடியும். எனவே, கழகங்கள் பார்பனிய பண்பாட்டின் வாகனங்களாக மாறிவிட்டன. இந்த விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லத்



படிப்பகம்

www.padippakam.com

தயங்குவது பார்ப்பனியத்திற்கு உதவ மட்டுமே செய்யும்.

மக்கள் என்றுமே பார்ப்பனியத்தை எதிர்த்து வந்திருக்கின்றனர். அவர்களின் எதிர்ப்பு பக்தி இயக்கத்திலும். வைணவத்தின். முயற்சிகளிலும், சிறுதெய்வ வழிபாட்டிலும் வெளிப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், அடிப்படையில் அது பிரபுத்துவ பண்பாட்டுக்கு எதிரான கலகம்தான். அதாவது அநீதியான சமூக அமைப்புக்கு எதிரான கலகம்தான்! பெரு உடையானாக சிவன் இருந்தாலும் சரி அல்லது வேறு எவன் இருந்ததாலும் சரி விவசாயிகள் கலகம் செய்தே வந்திருக்கின்றனர். உலகமய காலகட்டம் பார்ப்பனியத்திற்கு புதிய வாழ்வு அளித்திருக்கிறது என்றால், பிற்போக்குக்கு எதிரான இந்திய மக்களின் போராட்டமும் புதிய வடிவங்களையும் முகங்களையும் பெற்று வருகிறது. இந்திய மக்களின் வளர்ந்து வரும் வர்க்க போராட்டமே பார்ப்பனியத்தின் சவப் பெட்டியில் இறுதி ஆணியை அறையப் போகிறது. நமது சமகால போக்கான இதனை சிவக்குமரன் காண மறுப்பது ஏன்?


ஜைன / சமன வாழ்வியலின்
அறிமுகத்திற்காகவும்
விளக்கங்களுக்காகவும்
"ஆதிபகவன் அருளமுதம்
தாங்கிவரும்
திங்கள் அற இதழ்"
சுருத கேவலி
ஆசிரியர் : எம்.ஜனார்த்தனன்
முகவரி : ஸ்ரீ விசாகாச்சார்யர் தபோ நிலையம்
குந்த குந்தர் நகர் - 604 505
ஆயுள் உறுப்பான்மை : ரூ.751/-


சிவக்குமரன் போன்ற பண்பாட்டு போராளிகள் உணமையை இன்னும் நெருக்கத்தில் சென்று ஆய்வு செய்து கூரிய கருத்துக்களுடன் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் பார்ப்பனியத்துக்கு எதிராக மட்டுமல்ல கழகப் பண்பாட்டுக்கு எதிராகவும் ஒரு பண்பாட்டுக் கலகம் தேவையாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# "அபராதி நானல்ல"

உலகம் முழுவதிலும் தமிழ் நாடகச் சூழலில் அயல்மொழி நாடகங்களைத் தமிழ்ப்படுத்துவதன் தேவை அந்நாடகங்களின் உருவம் மற்றும் உத்திக்காகவோ அல்லது உள்ளடக்கத்திற்காகவோ, தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. அதிலும் தற்கால நவீன தமிழ் நாடகச் சூழல் என்பதே தழுவல் மற்றும் தமிழ்ப்படுத்தலில் இருந்தே தொடங்குகிறது.

குருட்டுத்தனமான முறையில் உள்வாங்குவதற்கும், விஷயங்களின் சமூகப் பண்பாட்டு மேம்பாட்டினை முதன்மைப்படுத்தி, விஷயங்களை உள்வாங்குவதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. சமூகப் பண்பாட்டு மேம்பாட்டினை முதன்மைப் படுத்துவோர், உள்ளடக்கத்திற்காக ஒரு நாடகத்தை மொழி பெயர்ப்பதைவிட, அதன் பயனுள்ள கூறுகளை உள்வாங்கிக்கொண்டு, அதைத் தமிழில் தழுவுவதையே விரும்புகின்றனர். அப்படிப்பட்ட ஒரு தழுவலே "அபராதி நானல்ல"

நூல் : அபராதி நானல்ல (நாடகம்)
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை
44, 3-ஆம் மாடி
மத்திய சந்தைத் தொகுதி
கொழும்பு - 11
விலை : ரூ. 100.00
பக்கங்கள் : 80

சிலே நாட்டவரான 'அரியேல் டோர்ப்ஃமன்' ஸ்பானிய மொழியில் எழுதிய நாடகத்தின் ஆங்கிலப் பிரதியான DEATH AND THE MAIDEN -னைத் (மரணமும் மங்கையும்) தழுவி தமிழில் எழுதப்பட்டதே "அபராதி நானல்ல". இதன் ஸ்பானிய, ஆங்கில வடிவங்கள் மேடையிலும், ஆங்கில மற்றும் சிங்கள வடிவங்கள் திரையிலும் பெரும் வெற்றி பெற்றன. நாடகம் கூறும் விஷயம் நமது சமகாலத்திற்கும், எதிர்காலத்திற்கும்கூட மிகவும் நெருங்கிய தொடர்புடைய ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com

நூலாசிரியர் சி.சிவசேகரம் சுட்டிக்காட்டும் சிலேயின் சூழலை சிறிது அவதானிப்பதும் நல்லது. அண்மைக்கால வரலாற்றில் மிகவும் கொடுமையான அரச வன்முறையை அனுபவித்த நாடு சிலே. அமெரிக்காவின் பொருளாதார நலன்களுக்காக சிலேயின் சனநாயகமும் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி ஸல்வடொர் அயன்டேயும் பலியான பின்பு திட்டமிட்ட முறையில் ராணுவ ஆட்சியின் எதிரிகள் எனக் கருதப்பட்டவர்கள், குறிப்பாக இடதுசாரிகள், பழிவாங்கப்பட்டனர். கொலை, சித்திரவதை, ஆட்கடத்தல், காணாமற் போக்குதல் போல நிகழ்வுகள் மூலம் அரசாங்கம் தனக்கு எதிராக யாரும் கிளர்ந்தெழ முடியாதவாறு பயம் மிகுந்த ஒரு சூழலை உருவாக்கியது. இந்தக் கொடுமை மிக்க ஆட்சியைத் தூக்கி எறிய இரண்டு தசாப்தங்களாயின. எனினும் நிரபராதிகளைத் தண்டித்த ராணுவத்தினருக்கு எதிராக எதுவுமே செய்ய முடியாத விதமாக ஒரு சமரச உடன்படிக்கையின் மீதே சனநாயகம் மீளவும் அனுமதிக்கப்டபட்டது.

சில ஆண்டுகள் முன்பு (1998-இல்) லண்டனில் கைதான சிலேயின் முன்னாள் ராணுவ சர்வாதிகாரியாக இருந்த பினோஷேயை ஸ்பெயினில் கொலைக் குற்றங்கட்காக விசாரிக்க எடுத்த முயற்சி தோல்வி கண்டது. பின்னர் சிலேக்குத் திரும்பிய பினோஷேயின் உடல்நிலை காரணமாக அவர் மீதான வழக்கை நடத்த முடியாது என்று நீதி மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது. எனினும், பினோஷேயையும் உயர் ராணுவ அதிகாரிகளையும் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான முயற்சிகள் இன்னும் ஓயவில்லை.

சனநாயக ஆட்சி மாற்றம் ராணுவத்தினருக்கு எதிராக எதுவுமே செய்ய இயலாத ஒரு கையாலாகாத நிலையில் இருந்ததையும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணை ஆணையங்களது பயனின்மையையும் முன்வைத்து 'அரியேல் டோர்ப்ஃமன்' எழுதிய நாடகம்தான் **DEATH AND THE MAIDEN.**

கதை, மேலோட்டமாக நோக்கினால் மிக எளிமையானது. முன்னை சர்வாதிகார ஆட்சிக் காலத்தில் கடத்திச் செல்லப்பட்டுச் சித்திரவதைக்கும் வன்கலவிக்கும் உட்படுத்தப்பட்ட பெண்ணும் அவரது கணவரும் தங்கள் கடற்கரையோர வீட்டில் தங்கியுள்ளனர். கணவரை, அரசாங்கம் கடந்த காலத்தின் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும்



படிப்பகம்

ஆணையத்திற்கு அதிகாரியாக நியமித்தது பற்றி அறிந்த அந்த நாளே அவரது வாகனம் நடுத்தெருவில் டயர் காற்றுப் போய் நிற்கிறது. அவருக்கு ஒரு மருத்துவர் உதவுகிறார். உதவ வந்த மருத்துவர், தம்பதிகளின் வீட்டில் இரவைக் கழிக்க நேர்கிறது. இந்த மருத்துவரே வதை முகாமில் தனக்குக் கொடுமை செய்தவர் என்று சந்தேகித்த பெண் அவரைக் கயிற்றால் கட்டி விசாரணை நடத்துகிறார். கணவர் அவ்விசாரணையை எதிர்க்கிறார். மருத்துவர் தான் குற்றவாளியல்ல என மறுக்கிறார். பெண் தன் கையில் உள்ள துப்பாக்கியைக் காட்டி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுகிறார். இதனூடே திருமணம், குடும்பம், மனைவி காணாமல் போன போது கணவன் வாழ்க்கை, கழுக்கம் காத்தல் போன்ற விஷயங்களும் பேசப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வாயிலாக மிக முக்கியமான அரசியல் கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. இக்கதை பல்வேறு சமூகங்களினதும், மக்களின் சில பகுதியினராவது மிகவும், அறிந்த அல்லது அனுபவித்த விஷயங்கள் பற்றியதே. எனவே, அடக்கு முறையாளர் யாரெனத் தெளிவாக அடையாளங் காட்டாமலும், பாதிக்கப்பட்டவர்களின் அரசியல் அடையாளத்தைக் காட்டாமலும், தமிழில் தழுவி எழுதப்பட்ட இந்நாடகப் பிரதி பல மூன்றாமுலக நாடகச் சூழலுக்குப் பொருத்தமுடையதாகவே நூலாசிரியர் கருதுகிறார். மூன்றாமுலக சமூகச் சூழலைப் பிரதிபலிக்கும் இந்நாடகம் மூன்றாமுலக நாடுகளில் நிகழ்த்துதல், வாசித்தல் மூலம் அநேகரைச் சென்றடைய வேண்டும்.

மூலப்பிரதியில் நாடகம் முழுவதும் இழையோடும் ஐரோப்பிய இசைக்கு மாற்றாக புரந்தரதாசரின் கன்னட சாகித்யமான

**"அபராதி நானல்லா. அபராத வெனக்கில்லா**
**கபட நாடக சூத்ரதாரி நின்னே"**

என்ற பாடலை (ரேவதி ராகத்திலமைந்த இந்தப் பாடலை மகாராஜபுரம் சந்தானம் பாடியுள்ளார்) பயன்படுத்தியதோடல்லாமல் நாடகப் பிரதியின் பெயராகவும் "அபராதி நானல்ல"வே தேர்வு செய்யப்பட்டுள்ளது. நாடகப் பாத்திரங்களின் பெயர்களையும் மூலப்பெயர் தவிர்த்து, மாலினி, குமார், ராஜா எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார். (மூலப்பிரதியில் பாத்திரங்களின் பெயர்கள் என்ன என்பதை முன்னுரையிலாவது தந்திருக்கலாம்) இலங்கைத் தமிழின் பேச்சு வழக்கு மொழியில்

எழுதியதன் மூலம், ஒரு நேரடித் தமிழ்ப்படைப்பை வாசிக்கும் உணர்வை அடைய முடிகிறது.

'தமிழ்ப்படுத்துகிறேன்' என பலர் (அனைவரும் அல்ல) தமிழையும், தமிழர்களையும் படுத்திக் கொண்டிருப்பார்கள். அப்படி இல்லாமல் "அபராதி நானல்ல" தமிழுக்கு ஒரு நல்வரவே. நவீன இலக்கியத் தமிழ் என ஆங்கிலத்திடை சில தமிழ் வார்த்தைகளை மட்டுமே வாசித்துப் பழகியவர்களுக்கு இலங்கைத் தமிழ் சிறிது வாசிப்புச் சிரமத்தைத் தரும். இருந்தாலும் தமிழ் (புரியும்) வாசிப்போமே.

-நிலா விழியன்

## இருப்பு - கவிதை தொகுப்பு

தொடர்ந்து நிறையச் சிறு பத்திரிகைகளில் தன் சிறு சிறு கவிதைகளுடன் இடம் பெற்ற பெயர் பொன்.குமார். அவரின் கவிதைத் தொகுப்பான 'இயல்பு' 2000-ஆவது ஆண்டில் சிற்பி அறக்கட்டளை பரிசு பெற்றது. 2002-ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் 'நீல பத்மம் விருது' மற்றும் சென்னை கவிஞாயிறு தாராமதி அறக்கட்டளை 'கவிஞாயிறு தாராமதி கவி விருது' வழங்கியுள்ளது.

பொன்.குமாரின் கவிதைத் தொகுப்பு 'இருப்பு'

'நினைவு தெரிந்து
எதுவும் நடந்ததில்லை விருப்பப்படி.
திணிக்கப்பட்டவையே அனைத்தும்.
பிறப்பு உள்ளிட்டு.
வளர்ப்பு, படிப்பு, திருமணம் இப்படி...
ஒரு வகையில்
தவிர்க்கவியலாத திணிப்பு.
இப்போதும் தொடர்கிறது
பிள்ளைகள் மீது என்னால்'

போன்று யதார்த்தமான விஷயங்களை உள்ளடக்கங்களாகக்

www.padippakam.com

கொண்ட கவிதைகள் சில (கெட்ட பெயர், பாட்டியின் கதைகள், அந்நியம், பத்தினி.. ... )

'ஓவியனைக் கேட்டது பச்சைக்கிளி
எவ்வண்ணத்தில் என்னைத் தீட்டினாய்?'
பதில் வந்தது
'கிளிப் பச்சை'

என 'கடி' வகைக் கவிதைகள் சில (சகுனம், கண்ணாடி, நிம்மதி... ..)

அதிகம் பேசாத அவன்
... ... ... ... ... ... ... ... ...
இறப்பதற்குச்
சில நிமிடங்களுக்கு முன்
என்ன சொல்ல நினைத்திருப்பான்?

போன்று தத்துவ(?) விசாரணைக் கவிதைகள் சில (தலைப்பற்றவற்றுள் பல - தலைப்பின்மையே அவற்றை தத்துவமாக்கியதோ?)

சிநேகிதர்கள் விவரித்தது
புத்தகத்தில் படித்தது
சினிமாவில் பார்த்தது
இதில் எதைப்போலுமில்லை
முதலிரவு

போன்ற சுய பச்சாதாப/விசாரணைக் கவிதை வரிகள் கொண்ட தொகுப்பு. அருமையான அட்டைப்படம். ஈர்க்கிறது. அந்த அளவிற்குக் கவிதைகள் இல்லை என்பதே உண்மை.

தொகுப்பாக வரும்போது இன்னும் அதிக கவனமும் கவித்துவமும் தேவை. 'கவித்துவம்' என்ற வார்த்தை மூலம் நான் ஏதோ இலக்கணம் சொல்ல வருவதாய் நினைக்க வேண்டாம். 'நினைவு தெரிந்து எதுவும் நடந்ததில்லை விருப்பப்படி. திணிக்கப்பட்டவையே அனைத்தும். பிறப்பு உள்ளிட்டு, வளர்ப்பு,



படிப்பகம்

www.padippakam.com

திருமணம் இப்படி... ஒருவகையில் தவிர்க்கவியலாத திணிப்பு இப்போதும் தொடர்கிறது பிள்ளைகள் மீது என்னால்' 'சிநேகிதர்கள் விவரித்தது, புத்தகத்தில் படித்தது, சினிமாவில் பார்த்தது, இதில் எதைப்போலுமில்லை முதலிரவு' 'ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாவிட்டாலும் ஒரு போதும் ஒத்துப் போவதில்லை உடம்பும் மனசும்' இங்குள்ள மூன்று மேற்கோள்களும் கவிதைகள் இல்லைதானே? ஆனால்... அச்சின் வரிசையில்... என்றால்... இம் மதிப்புரையின் வார்த்தைகளும்

ஒன்று
இரண்டி ரண்டு
மும் மூன்று என
வசதிப்படி வரிசைகளெடுத்து
கவிதைகளாகட்டும்
எனச்
சபிக்கின்றேன்-
படைப்பாளியாக.
படிப்பவன் பற்றி... ... ...?

(பின்குறிப்பு : பெரியார் பிஞ்சு இதழில் பொன்.குமார் எழுதிய பாடல் மழையே மழையே மிகவும் சிறப்பாக வந்துள்ளது. புதிதாக ஒரு பத்திரிகையில் எழுதும்போது எடுக்கும் சிரத்தையை 'நம்' தொகுப்பு வெளியாகும் போதும் எடுத்தால் தொகுப்பு சிறப்பாக அமையும்)

- வீரா

இந்து மத(?)த்தை முன்னிருத்தும் படைப்புகள்
தாங்கிய பத்திரிகைகளே குழந்தை பத்திரிகைகள்
என்ற தொடர்ந்த சூழலை மாற்ற முயலும் சிலவற்றில்
ஒன்றாக பகுத்தறிவைப் பறைசாற்றும் குழந்தைகள் பத்திரிகை

**பெரியார் பிஞ்சு**

ஆசிரியர் : கி.வீரமணி
முகவரி : பெரியார் திடல், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை
சென்னை - 600 007
ஆண்டு நன்கொடை ரூ.35.00



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் மத்தியில் சு.சமுத்திரம்



நாடகப்பயிற்சியில் அய்யங்காளை, மதிகண்ணன், சு.சமுத்திரம்

# தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடுகள்

குஜராத் வன்முறைகளின் மீதான உண்மை அறியும் குழு அறிக்கை மற்றும் ஆய்வுக் கடிதங்கள் அடங்கிய

**மதவெறிக்கு எதிராக... (பிரசுரம்)** ரூ 5

காவிபயங்கரத்திற்கெதிரான கலாச்சார அரங்கில் கவிஞர் பாட்டாளியின் தலைமையில் நடைபெற்ற

**சபர்மதி நதிக்கரையில்...**

**கவியரங்க ஒலிப்பதிவு**

**ஒலிநாடா** ரூ 30

**ஒலிக்குறுந்தகடு** ரூ 75

மக்கள் கலைவிழாவில் நடைபெற்ற

**பண்பாட்டுச் சீரழிவிற்குப் பெரிதும் காரணம் எது?**

**விவாதச் சதுக்க ஒலிப்பதிவு**

**ஒலிநாடா** ரூ 30

**ஒலிக்குறுந்தகடு** ரூ 75

தேவைகளுக்கு

**மதிகண்ணன்**
5-36-4ஆ. பாரதி நகர்
மின்வாரியக் குடியிருப்புகள் (கிழக்கு)
அருப்புக்கோட்டை - 626 101
செல்லிடப் பேசி : 94431 84050